
27th November 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 07 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com



## துபாய் மாநாட்டில் பங்கேற்கும் ரணில்

டுபாயில் நடைபெறுகின்ற சர்வதேச காலநிலை தொடர்பான உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 80

02ம் பக்கம்பார்க்க...

# யுத்த நிறுத்தத்தின் பின் மீண்டும் போர் மூளும் அபாயம்



### ஹமாஸ் அழிக்கப்படும் வரை யுத்தம்

### பலஸ்தீன் தாயகத்துக்காக போர் தொடரும்

### இஸ்ரேல் - ஹமாஸ் கங்கணம்

(உதயம் வெளிவிவகார நிருபர் எம்.என். முஹம்மட்)

பலஸ்தீனப் போராட்டம் அதன் வரலாற்றில் முக்கியமான நிகழ்வை அடைந்துள்ளது. இதுகால வரைக்கும் தொடராக

02ம் பக்கம்பார்க்க...

## மஹர சிறைச்சாலை பள்ளி விரைவில் நிர்வாகிகளிடம் கையளிப்பு

### அரசு நடவடிக்கை என்கிறார் அசாத் சாலி

மஹர சிறைச்சாலை பள்ளிவாசலை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது என்கிறார் அஸாத் சாலி

மஹர சிறைச்சாலை பள்ளிவாசலை விடுவிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துவருவதாக முன்னாள் மேல் மாகாண ஆளுனர் அசாத் சாலி தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதம் 10 திகதி ஜனாதிபதி அலுவலகத்தில்

02ம் பக்கம்பார்க்க...

## இஸ்ரேலில் வேலை வாய்ப்பு ஆட்களை திரட்டும் முஸ்லிம் எம்பிக்கள்

பலஸ்தீன் – இஸ்ரேல் யுத்தத்தையடுத்து இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு இலங்கையிலிருந்து ஆட்களை சேர்ப்பதற்கு தொழிலமைச்சு எடுக்கும் நடவடிக்கையை பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் தொகுதிகளிலிருந்து ஆட்களது பெயர்களை சிபாரிசு செய்திருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவ்வாறு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் தொகுதிகளில் உள்ளவர்களது பெயர்களை சிபாரிசு செய்திருப்பது

02ம் பக்கம்பார்க்க...

## செப்டெம்பர் மாதத்தில் 16 மாணவிகள் கர்ப்பம்

இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் மாத்திரம் 168 சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அத்துடன் 16 வயதுக்குட்பட்ட 22 சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளதாகவும், அரசாங்க நிதி பற்றிய குழுவின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

அண்மையில் குழுவின் தலைவர்

02ம் பக்கம்பார்க்க...



## அடுத்த மாத மொட்டு மாநாட்டில் அரசியல் ரீதியான தீர்மானங்கள்

### நாமல் அறிவிப்பு

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டில் அரசியல் ரீதியில் முக்கிய தீர்மானங்களை அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரை நாங்கள் அறிவிப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...






அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி  Amãna Bank

## யுத்த...

(முன் பக்கத் தொடரச்சி)

ஐந்து வருடங்கள் - பத்து வருடங்கள் என இஸ்ரேலில் இஸ்ரேல் வாழிய பல கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த கைதிகளின் விடுதலை ஆயுத முனையில் இடம்பெற்றிருப்பது வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாகக் காணப்படுகின்றது. இதுகாலவரைக்கும் இஸ்ரேல் தனது முழு அதிகாரத்தையும் செலுத்தி வந்த நிலைமையில் ஹமாஸூம் ஏனைய பலஸ்தீனப் போராளி அமைப்புக்களும் தற்பொழுது சமன்பாட்டை பெருமளவுக்கு மாற்றியுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் ஊடாக பெண்கள், குழந்தைகள் என இஸ்ரேல், இஸ்ரேலிலுள்ள பலரை விடுவித்துள்ளது. அதேகோன்று காஸாவிலிருந்து பல இஸ்ரேலியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக 12 தாய் பிரஜைகளை ஹமாஸ் எந்தவித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்திருப்பது உலகளவில் அதன் நன்மதிப்பை அதிகரித்துள்ளது.

குறிப்பாக ஹமாஸை பொறுத்தவரையில் அவர்கள் இஸ்ரேலை மாத்திரிமே தங்களுடைய எதிரிகளாகப் பார்ப்பதோடு, சந்தர்ப்பவசமாக சிக்கிய ஏனைய அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்வதற்கு ஹமாஸ் முடிவு செய்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர், நான்கு நாள் யுத்தம் முடிந்தவுடன் முழு மூச்சோடு ஹமாஸ் அழிக்கப்படும் வரை யுத்தம் தொடருமென எச்சரித்துள்ளார். இன்னொரு பக்கம் இஸ்மாயில் ஹனீயா எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஜெரூசலத்தை தலைமையகமாகக் கொண்ட பலஸ்தீன நாட்டுடன் தான் முடிவடையுமென்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தக் கூற்றுக்களை கருதுகின்ற போது இரு தரப்பும் முனைப்புடன் தொடர்ந்து போர் செய்வதிலேயே கவனம் செலுத்தியுள்ளது. இதேவேளை தொடராக ஹிஸ்புல்லாக்கள் லெபனானிலிருந்து இஸ்ரேலைத் தாக்கி வருவதோடு, யெமனிலிருந்து ஹூத்திகளும் இஸ்ரேலைத் தாக்கி வருகின்றனர். அதேபோன்று இராக்கிலுள்ள போராளிகள் அமெரிக்கத் தளங்கள் மீதும் தாக்குதல் நடாத்தி வருகினற்னர். குறிப்பாக ஹூத்திகளின் செயற்பாடுகள் காரணமாக பல கப்பல்கள் செங்கடல் பகுதியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளதோடு, அது உலகளாவிய வர்த்தகத்தை பெருமளவில் பாதிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை யுத்தம் காரணமாக இஸ்ரேலுடைய உல்லாசத்துறை மிகவும் பயங்கரமாக பாதிக்கப்பட்டுள்ளதோடு, இஸ்ரேலில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்படும் அச்சம் நிலவுவதாக அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

காஸா மக்கள் சில விடயங்களில் தெளிவாக இருக்கின்றனர். குறிப்பாக சில அரபு நாடுகளின் நிவாரணப் பொருட்களை நிராகரித்துள்ளதோடு, உங்களுடைய உணவு எங்களுக்கு வேண்டாம். எங்களுக்காக உங்களுடைய இராணுவத்தை அனுப்புங்கள் என்று மிகவும் பகிரங்கமாக கூறுகின்ற நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக இதுகாலவரை சில அரபு நாடுகளுக்கு இருந்த இடத்தை ஹமாஸ் பிடித்திருப்பதானது அரபு நாட்டு மன்னர்களுக்கு மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, அது எதிர்கால அரபுலகின் போக்குகளை தீர்மானிப்பதில் பெரும் பங்காற்றுமென எதிர்பார்ப்பாக்கப்படுகின்றது.

இதேவேளை அல்-முஹைதீன் எனப்படும் ஹிஸ்புல்லா சார்பு செய்திகளின் படி ஹிஸ்புல்லாக்கள் யுத்த நிறுத்தத்துக்கு உடன்படவில்லையென்றும், அவர்கள் யுத்த நிறுத்தத்தின் பங்காளிகள் அல்லவென்றும், தொடராக வட இஸ்ரேல் மீது தாக்குதல் நடாத்துவமென குறிப்பிட்டுள்ளது. யெமனில் காணப்படும் ஹூத்திக்களும் அதாவது அன்ஸாருல்லா படைகளும் தாம் யுத்த நிறுத்தத்தின் ஒரு பகுதியல்லவென்றும், தொடராக இஸ்ரேல் மீது தாக்குதல் நடாத்தப்படுமென்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

இந்த விடயம் உணர்த்தும் மிக முக்கியமான விடயம் என்னவென்றால், நான்கு நாட்கள் முடிவடைவதற்குள் அல்லது நான்கு நாட்கள் முடிவடைந்த பின்பு முழு வீச்சிலும் மீளவும் இரு தரப்பினருக்கிடையில் தாக்குதல் ஆரம்பிக்கும் என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

## இஸ்ரேலில்...

(முன் பக்கத் தொடரச்சி)

நியாயமானதா என கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஊடகங்களில் வடகிழக்கைச் சேர்ந்த பல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களது வெளிவந்துள்ளன. இது உண்மையா என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் தம் தொகுதிகளில் உள்ள முஸ்லிம் அல்லாதவர்களது பெயர்களை சிபாரிசு செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சில தினங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இலங்கையிலிருந்து இந்த வெற்றிடங்களுக்கு ஆட்களை அனுப்புவதற்கு தனது ஆட்சேபனையை தெரிவித்திருந்தார். அப்போது பாராளுமன்றத்தில் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட அதனை ஆதரித்து கருத்துத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஏன் இப்படி பஞ்சொந்திகளாக நடக்கிறார்கள் என்ற கேள்வி பரவலாக எழுப்பப்பட்டுள்ளது.

## மஹர...

(முன் பக்கத் தொடரச்சி)

இடம்பெற்ற கலந்துரையாடலில், நீதி சிறைச்சாலை அமைச்சும், புத்த சாசன சமய விவகார அமைச்சும் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ஆளுனர் அசாத் சாலி தெரிவித்தார்.

முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த ஜூலை மாதம் 05ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போது விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே, ஜனாதிபதி செயலகம் இது குறித்து மேலதிக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மஹர பள்ளிவாசலை உடன் நிர்வாகிகளிடம் கையளிக்குமாறு கோரி மஹர பழைய பள்ளிவாசலை பாதுகாக்கும் அமைப்பு ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை மஹர சிறைச்சாலைக்கு முன்னாள் நடாத்தியது.

## செப்டெம்பர்...

(முன் பக்கத் தொடரச்சி)

ஹர்ஷ டி சில்வா தலைமையில், இது தொடர்பிலான குழு நாடாளுமன்றில் கூடிய போதே இந்த விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

இம்முக்கிய கூட்டத்தில், ஜனநாயகத்திற்கான வெஸ்ட்மின்ஸ்டர் அறக்கட்டளை உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, பாடசாலை மாணவிகள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும், விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், சுகாதார வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகள் தேவைப்படும் பாடசாலை மாணவிகளின் எண்ணிக்கையைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான கட்டமைப்பைத் தயாரிப்பது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பாடசாலை மாணவர்களுக்கான பாலியல் கல்வியை வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது மிகவும் அவசிய அவசர தேவை எனவும், இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார வசதிகள் அவசியமான பாடசாலை மாணவிகளின் எண்ணிக்கையை சரியாக அடையாளம் காண்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பொறி முறையொன்றைத் தயாரிப்பது குறித்தும், அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த மாத...

(முன் பக்கத் தொடரச்சி)

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், கட்சி என்ற ரீதியில் பலமாக செயற்படுகிறோம். அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டில் அரசியல் ரீதியில் முக்கிய தீர்மானங்களை அறிவிப்போம்.

## துபாய்...

(முன் பக்கத் தொடரச்சி)

பிரதிநிதிகளைக் கொண்ட தூதுக்குழுவோடு டுபாய் பயணமாகிறார்.

தூதுக்குழுவில் சுற்றாடல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, ஜனாதிபதியின் சுற்றாடல் விவகார ஆலோசகர் ருவன் விஜேவர்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தத் தூதுக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

# “பலஸ்தீன் விவகாரத்தில் உலகின் தோல்வியும்: கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களும்”

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்த கலந்துரையாடல்











(அஷ்ரப் ஏ சமட் )

பலஸ்தீனின் காசாவில் இடம் பெறுகின்ற போர்க் குற்றங்கள், ஆயிரக்கணக்கான அப்பாவி குழந்தைகள் மற்றும் மக்களை கொன்று குவிப்பதை தடுப்பதில் உலகத் தோல்வியின் தாக்கங்களும் அதனுடன் உலகின் பிற பகுதிகளில் ஏற்பட்டுள்ள அழுத்தங்களும் தொடர்பான கலந்துரையாடல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நேற்று 15ஆம் திகதி தபலாக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

“பலஸ்தீன் விவகாரத்தில் உலகின் தோல்வியும்: கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களும்” எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கலந்துரையாடலில் இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். செய்ட், இலங்கையின் ஐ.நா அலுவலக முன்னாள் தேசிய தகவல் அதிகாரி மொஹான் சமரநாயக்க, சமூக ஆர்வலர் எம்.என் முஹம்மட் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

இங்கு உரையாற்றிய பலஸ்தீன தூதுவர் உரையாற்றுகையில்,

கடைசி பலஸ்தீனன் இருக்கும் வரை எங்களது நிஜ பூமிக்காகவும், எமது உரிமைக்காகவும் நாம் போராடுவோம். சர்வதேச நாடுகளுக்கும், இவ் உலகில் வாழும் சகல சமூகத்தினருக்கும் பாலஸ்தீன தேசம் பற்றிய உண்மையை சாதாரண மக்களும் தெரிந்து வைத்துள்ளார்கள். கடந்த 40 நாட்களுக்குள் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் , நோயாளிகள் வைத்தியம் பெருகின்ற வைத்தியசாலையை கூட இஸ்ரேல் அழித்து வருகின்றனர். இதை உலகில் உள்ள எந்த நாடோ இவ் காட்டுமிராண்டிக் கொலைகளை அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் பலஸ்தீன் ஹாமாஸ் போன்ற தமது நிஜ பூமிக்காக போராடுபவர்கள் ஒருபோதும் இவ்வாறானதொரு செயல்களை செய்ய மாட்டார்கள். குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், வைத்தியசாலை எவ்வாறு பாதுகாப்பது . கவனிப்பது என்று எமது மதம் அழகாகச் சொல்லித் தந்துள்ளது. அவ்வாறு தான் ஹமாஸ் நடந்து கொள்கின்றனர்.. ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு உள்ளது. சர்வதேச சமூகங்கள் இதனை பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. அவர்கள் அறிக்கைகள் ,கோரிக்கைகளை இஸ்ரேல் கவனத்திற்கு எடுக்கவில்லை. பழிக்காடாக்கும் அப்பாவிக் குழந்தைகள் வயோதிபர்கள் என்ன பாவம் செய்தார்கள் எனக் கேட்க விரும்புகிறேன். என அங்கு பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி செய்யட் உரையாற்றினார்கள்.

இங்கு உரையாற்றிய மொஹான் சமரநாயக்க - பலஸ்தீன் நாட்டுக்காக உலக நாடுகளில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் உலக நாடுகளில் நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இரண்டு லட்சம் முஸ்லிம்கள் லண்டனில் ஒன்று கூடி எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்கள். கடந்த காலங்களில் இலங்கையில் பாரிய ஆர்ப்பாட்டங்களை நாங்கள் நடத்தினோம். தற்போது எமது நாட்டில் பாரிய அளவில் அவ்வாறான எதிர்ப்பு பேரணிகளை எமது இளைஞர்கள் நடத்துவதை காண முடியவில்லை. நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர்கள் 159 பேர் கையொப்பமிட்டு ஜக்கிய நாடுகள் கொழும்பு காரியாலயத்தில் குளிப்பதை நாம் ஊடகங்களில் அவதானித்தோம். பலஸ்தீன் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் பெருமளவில் அங்கு கொலை செய்யப்பட்டுள்ளார்கள். நேற்று முன்தினம் கூட அல் ஜசீரா தொலைக்காட்சியில் காசாவில் வைத்தியசாலையில் பிறந்த சிசுக்கள் உரிய வெப்பம், மின்சார வசதிகளின்றி வைத்தியசாலைக்குள் 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ள செய்தியை அவதானித்தேன். அத்துடன் காசாவில் மழை பெய்துள்ளது. அங்கு கூடாரங்களை அடித்துக் கொண்டு வாழ் பாலஸ்தீன அகதிகள் படும் துண்பங்களையும் ஊடகங்கள் ஊடாக காணக்கூடியதாக உள்ளது எனவும் மொஹான் சமரநாய்கக அங்கு உரையாற்றினார் .

என்.எம். முஹம்மட் இங்கு உரையாற்றுகையில் .

முன்னாள் ஜனாதிபதி , ஆர்.பிரேமதாசா காலத்தில் இலங்கையில் இஸ்ரேவேல் தூதரக ஆலயம் திறப்பதற்கு அனுமதி அளிக்கவில்லை... ஜேர்மனியில் இரண்டாம் மகா யுத்தம் நடைபெறும் போது கூட ஓர் யுத்த ஒழுக்க விழுமியங்கள் இருந்தன. குழந்தைகள், வயோதிபர்கள், மத ஸ்தாபனங்கள் மீது யுத்தம் செய்யவில்லை. ஆனால் இஸ்ரவேலர்கள் பலவந்தமாகவும் அமேரிக்கா, பிரித்தானியர்கள் ஆதரவுடன் பலஸ்தீன் நாட்டின் கருவருத்து ஆக்கிரமித்தார்கள். அவர்கள் சகல பொருளாதாரமும் அமெரிக்காவில் உள்ளது. அமெரிக்கா அரபு நாடுகளின் 25 வீதமான பெட்ரோலுக்காக அரபு நாடுகளை பிரித்து ஆள்ந்து வருகின்றன. இந்த அரபு நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஓர் அனியில் நிற்குமானால் இந்த இஸ்ரவேலர்களின் அடாவடி தனத்திற்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஐக்கிய நாடுகள் செயலாளர் கூட ஒரு அதிகாரம் இல்லாத ஓர் சபையாக உள்ளது. அது மட்டுமல்ல காசாவில் வைத்தியசாலைகள் குழந்தைகள் கொலைசெய்து வைத்தியசாலைகளை அழிவுக்கும் உலக சுகாதார ஸ்தாபனம் நிறுத்துமாறும் நிர்ப்பந்தங்கள் கோரிக்கைகளைக் கூட இஸ்ரோல் கணக்கில் எடுக்கவில்லை.

ஆகவே தான் இலங்கையராகிய நாம் வெளிநாட்டு அமைச்சு, பலஸ்தீன் தூதுவர் ஆலயத்தின் ஊடாக குறைந்தது நமது நாட்டின் தேயிலைப் பொதிகளை ரேந்நது அங்கு பலியாகும். மக்களுக்கு அன்பளிப்பு செய்வதற்கு நாம் நமது ஸ்தாபணங்கள் பொதுமக்கள் தயாரகுவோம் என சமூக செயற்பாட்டாளர் மொஹமட் வேண்டிக் கொண்டார்.



குவைத் நாட்டின் “பைத்துஸ் ஸகாத்“ நிறுவனத்தின் அனுசரணையில் AMYS (ஜம்இய்யதுஷ் ஷபாப்) நிறுவனத்தினால் பொலொன்னறுவை தல்பொத்த, லங்காபுர மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட குடிநீர் திட்டமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பொழுது எடுக்கப்பட்ட படம். படத்தில் பொலொன்னறுவை மாவட்ட அரசாங்க அதிபர் W .A தர்மசிறி, வலயக் கல்வி அதிகாரி K.L.U. பாலித மற்றும் AMYS நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M.S.M. தாஸீம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் A.J.M. வாரித் ஆகியோரைக் காணலாம்.

# காய்ச்சல், இருமல் இருந்தால் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம்

## - பேராசிரியர் சந்திம ஜீவந்தர பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல்

**(ஐ. ஏ. காதிர் கான்)**

தங்கள் பிள்ளைகளுக்கு காய்ச்சல், இருமல் மற்றும் மார்புச் சளி ஆகியன இருந்தால், பெற்றோர்கள் அவர்களை முன்பள்ளிப் பாடசாலைகள், பாடசாலைகள் மற்றும் பயிற்சி வகுப்புக்களுக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு, சுகாதாரத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பதிவாகும், காய்ச்சல், இருமலுடன் கூடிய சுவாச நோய் மற்றும் மார்புச் சளி என்பன, கொவிட் - 19 மற்றும் இன்புளுவன்சா உள்ளிட்ட பல வைரஸ்களின் கலவையாக இருக்கலாம் என, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் அலர்ஜி, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆகையினால், இவற்றிலிருந்து தமது குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் அவர் பெற்றோர்களிடம் கேட்டுள்ளார்.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றஊப் ஹக்கீம் இலங்கைக்கான சஊதி அரேபியத்தூதுவர் காலித் பின் ஹமுத் அல்கஹ்தானியை சஊதி அரேபியத்தூதரகத்தில் அண்மையில் சந்தித்துக்கலந்துரையாடினார்.இதன் போது சர்வதேச மற்றும் தேசிய அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது இதே வேளை முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட் ஏ.எம்.பைசால் மற்றும் ஹஜ் கமிட்டியின் தலைவர் இப்றாஹீம் சாஹிப் அன்சார் ஆகியோரும் இலங்கைக்கான சஊதி அரேபியத்தூதுவரை தூதரகத்தில் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளனர்.

**(அஸ்ஹர் ஆதம்)**







***வாசகர்களே!***

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 NOVEMBER 27 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# தேர்தல் முறையில் மாற்றம் சிறுபான்மை சமூகங்களுக்கு நன்மையாக அமையுமா?

நாட்டின் தேர்தல் முறையில் மாற்றங்களை அறிமுகப்படுத்துவதற்காக அரசாங்கம் பொதுமக்களது கருத்துக்களை கோரியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய சிபாரிசுகளை முன்வைப்பதற்காக ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப்ஃ அவர்கள் தலைமையில் 10 பேர் கொண்ட ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய சிபாரிசுகளை முன்வைக்குமாறு அரசியல் கட்சிகள் மற்றும் ஆர்வமுள்ள பொதுமக்களிடம் ஜனாதிபதியின் செயலாளர் என்.எஸ்.பி. ஏக்கநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். பின்வரும் துறைகளில் சிபாரிசுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார்.

அமுலிலுள்ள அனைத்து தேர்தல் சட்டங்கள் தொடர்பாக பரிசோதித்து பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் விஷேட கவனம் செலுத்தி நடைமுறை தேவைகளுக்கேற்றவாறு தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கு தேவையான பரிந்துறைகளை முன்வைக்குமாறு ஆணைக்குழு கோரியுள்ளது.

மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், தேர்தல் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து குறித்த தேர்தலை நடாத்தி முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான கால அளவினை குறைத்தல்.

தற்போது நடைமுறையிலுள்ள வாக்குப் பதிவு முறைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பிற்கு சந்தர்ப்பத்தை வழங்குதல்.

ளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

ஒரே நபருக்கு மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக மாகாண சபை மற்றும் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.

தேர்தல் தினத்தன்று தேர்தல் பணிகளுக்கான சேவைகளை வழங்கும் அரச கூட்டுத்தாபன, அரச தொழில் முயற்சிகள், தனியார் துறைகளில் பணிபுரிவோருக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.

மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்வது தொடர்பாக விகிதாசார பிரதிநிதித்துவத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாது பல் சமூக தன்மையினை கவனத்தில் கொண்டு பிரதிநிதித்துவப்படுத்தும் தனி அங்கத்துவ முறையை கவனத்திற் கொண்டு பொறுத்தமான முறையொன்றை தயாரித்தல்.

அரசியல் கட்சிகள், சுயேற்சைக் குழுக்களால் முறையாக ஊடகங்களைப் பயன்படுத்துவது பற்றி வழிகாட்டல்களை தயாரித்தல்.

கட்சி முறையை பலப்படுத்தல். அரசியலில் பணத்தின் பங்கு மற்றும் கொள்கையை கைப்பற்றுபவர்களைத் தடுத்தல். மற்றும் அரசியல் கட்சிகளுக்கு பொது நிதியினை வழங்குதல். தேர்தல் பிரசாங்கள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய செலவுகளை தவிர்த்தல். சுகல மக்கள் துறை பிரிவினர்களின் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்த தேசிய ஐக்கியத்தினை வளப்படுத்துவதற்காக அரசியல் கட்சிகளின் வகிபாகம் உட்பட பல விடயங்கள் குறித்து கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் தேர்தல் தொடர்பாக பல முற்போக்கு மாற்றங்களுக்கான சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு வர்த்தமானி மூலம் கருத்துக்களை கோரியுள்ளது.

இது முன்னேற்றகரமான தேர்தல் முறை இருப்பது அவசியமாகும். ஊழல், மோசடிகளுக்கு இடமளிக்காத ஒரு தேர்தல் முறை நாட்டுக்குத் தேவைப்படுகின்றது. குறிப்பாக நாட்டின் சிறுபான்மை மக்களது நம்பிக்கையை வென்றெடுக்கும் தேர்தல் முறைமை அவசியமாகும். நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களது சனத்தொகைகக்கேற்ப பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்படுதல் அவசியமாகும். இந்த ஆணைக்குழு இந்த இலக்கினை அடையும் வகையில் சிபாரிசு செய்யப்படுவது முக்கியமானதாகும்.

எந்த வகையான கருத்துக்களை முன்வைப்பது. குறிப்பாக சிறுபர்னமை தமிழ், முஸ்லிம் சமூகம் முன்னுள்ள பொறுப்பாகும். சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களும், சிறுபான்மை அரசியல் கட்சிகளும் இந்த விடயத்தில் விஷேட கவனம் செலுத்துவது அவசியமாகும்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) “உதயம்”
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்திய 75வது ஊடகச் செயலமர்வு












(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்திவரும் 75வது ஊடகச் செயலமர்வும் 21ஆம் நூற்றாண்டில் இலத்திரனியவியல் மற்றும் சமூக ஊடகங்கள் எனும் தலைப்பில் 25.11.2023 கொழும்பு 12 பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் காலை 08.00 - 05.00 பி.ப வரை நடைபெற்றது இந் நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம் அமீன், மற்றும் கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் எம். எச். மும்தாஜ் பேகம் ஆகியேர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ் ஊடக செயலமர்வு கல்லூரியின் அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. கல்லூரியின் மாணவத் தலைவிகள், மற்றும் சிரேஸ்ட மாணவிகள் 160 பேர் கலந்து கொண்டார்கள்

இச் செயலமர்வில் பிரபல ஊடக நிறுவனங்களின் முகாமையாளர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர்களை விரிவுரைகளையும் செயற்பட்டு பயிற்சிகளையும் நிகழ்த்தினார்கள்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம், செய்தி அறிக்கையிடல் மற்றும் ஏ.ஆர்.ஏ லோசன் சிரேஷ்ட ஒலிபரப்பாளர், வானொலியில் எவ்வாறு செய்தி அறிக்கையிடுதல் மற்றும் செய்தி வாசிப்பு , சத்தி தொலைக்காட்சியின் செய்தி முகாமையாளர் ஜிப்ரி ஜெபதர்சனின் தொலைக்காட்சி செய்தியறிக்கையிடுதல் மற்றும் குரல் பயிற்சிகள் , சிகார் அனீஸ், சிரேஷ்ட வெளிநாட்டு செய்திச் சேவை,ஊடக பயிற்சியாளர் ,

இஸ்பாஹான் சராப்டீன்,இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் , சமூக சேவை ஊடக வலைத்தளங்களில் கைத்தொலைபேசி ஊடாக செய்தி தயாரித்தல் போன்ற தலைப்புகளில் விரிவுரைகளை நிகழ்த்தினார்கள்

பிற்பகல் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக ஆதில் சத்தார் .பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடகம் ,கலாச்சாரம் மற்றும் கல்வி செயலாளர் மற்றும் கல்லூரியின் பிரதி ,உப அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பிணர்களும் முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பிணர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

# கற்பிட்டியின் கல்வி வளர்ச்சியை மையமாகக் கொண்டு “கல்வி அபிவிருத்தி ஒன்றியம்” உருவாக்கம்

(கற்பிட்டி – எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி நகரம் கல்வியில் பல சாதனைகளை நிலைநாட்டிய வரலாறுகள் உண்டு. ஆரம்ப காலத்தில் கற்பிட்டி நகர பாடசாலையில் வெளி ஊர் மாணவர்கள் பாடசாலை விடுதிகளிலும் உறவீனர்களின் வீடுகளிலும் தங்கி கல்வி கற்று சிறந்த அடைவு மட்டங்களை ஈட்டிய வரலாற்று சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்பட்ட கற்பிட்டியின் கல்விப் பாதை கற்பிட்டி பாடசாலையில் கடமையாற்றிய ஒரு சில கல்வி அதிகாரிகளின் சுயநலப்போக்கின் காரணமாக கடந்த ஒரு தசாப்த காலமாக வீழ்ச்சி பாதையை நோக்கிய நகர்வுடன் கற்பிட்டி மாணவர்கள் வெளி ஊர் மற்றும் வெளி மாவட்ட பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்கும் நிலை இன்று தோன்றி உள்ளது.

பாடசாயினுடைய கல்வி முன்னேற்றத்திற்காக பாடசாலைக்கு வெளியில் ஊர் மயப்படுத்தப்பட்ட அமைப்பாக மேற்படி ஒன்றியம் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் ஒன்றியத்திற்கான செயற்க் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக ஓய்வு பெற்ற புத்தளம் வளையக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.டி.எம் பைறுஸமான்,

பிரதித் தலைவராக அதிபர் எம்.ஐ.எம் றஸ்ஸாக்,

செயலாளராக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.என்.எம்.எம் பஹ்ரி,

இணைச் செயலாளராக பட்டதாரி எஸ்.எம் அஸ்லம்,

பொருளாளராக முன்னால் போரூட் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் டி.எல்

எம் மகீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# பலஸ்தீன, இஸ்ரேல் இடையேயான போர் நிறுத்தமும் அதன் பின் விளைவுகளும்....!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேல் மற்றும் காசா போரில் மிகப் பெரிய அளவிலான மாற்றம் தான் 4 நாட்களுக்கான போர் நிறுத்தம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. கடந்த வியாழக்கிழமை நடைபெற வேண்டிய போர் நிறுத்தம் ஒரு நாள் தாமதமாக வெள்ளிக்கிழமை 24.11.23 அன்று காலை இஸ்ரேலிய நேரப்படி காலை 7.30 மணிக்கு அமலுக்கு வந்தது என்பதே உண்மையாகும். இந்த முயற்சியில் கத்தார் நாடு மிகப் பெரிய அளவில் வெற்றியை பெற்றுள்ளது என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லாமல் என்பதை நாம் இங்கு தெளிவாகவே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இந்த போரில் இதுவரை பாலஸ்தீனத்தில்(கசாவில்) 15,000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டு விட்டனர்.ஆகவே வாடிகன் நகரில் இருப்பது கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் அவர்கள் இதனை (Genocide) மனித குல படுகொலை என்று சற்றும் தாமதிக்காமல் தனது உள்ளக் கிடக்கையை தயக்கம் இல்லாமல் வெளிப்படுத்தி உள்ளதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சரி , இங்கே உளவியல் ரீதியான சில,பல கேள்விகள் நமக்கு எழுகிறது. அது போன்ற கேள்விகள் மிகுந்த அர்த்தம் வாய்ந்த ஒன்றாக இங்கே நாம் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலிய தேசம் என்பது தொழில்நுட்ப ராணுவ தளவாடங்கள் மற்றும் இராணுவ வீரர்கள், குண்டுகளை வீசி மக்களை அழிக்கும் நாசகார ஆயுதங்களை தன்னுடனே கொண்ட மிகப் பெரிய நாடு என்பதில் எந்த ஐயமும் இல்லை. இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் பயன்படுத்தும் தானியங்கி துப்பாக்கி மிகுந்த வலிமையான ஒன்றாக உள்ளது. அதனைத் விடுத்து உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு சக்தி வாய்ந்த ஏவுகணைகள் மற்றும் மொசாத் உளவு அமைப்பை கொண்ட இஸ்ரேல் மிகவும் குறுகிய காலத்தில் இந்த போரை இதுவரையிலான காலத்தில் முடிவுக்கு கொண்டு வந்து இருக்கலாம். ஆனால், இஸ்ரேலிய இராணுவ தலைமை தனது பிரதான வைரியாக கருதப்படும் ஹமாஸ் இயக்கத்தினருடன் ஏன் இறங்கி போக வேண்டும் என்கிற கேள்விக்கு என்ன பதில் என்கிற கேள்விக்கு நமக்கு எழுவது இயல்பான ஒன்றாகவே அமைந்துள்ளது.

இந்த போரின் முடிவில் இஸ்ரேல் ராணுவம் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளை கொன்று குவித்த நிலையில் ஹமாஸ், ஹொாதி, ஜிகாதி போர் குழுக்களின் வீரியமான தாக்குதல் ஒரு பக்கம், அதே சமயம் சர்வதேச அழுத்தங்கள் மற்றொரு பக்கம் என்கிற பல்வேறு பல நிலைகளின் காரணமாகவே சமாதான ஒப்பந்தத்திற்கு வந்ததாக அமெரிக்கா சர்வதேச விவகாரங்களுக்கான நிபுணர் இயன் பீமர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இந்த போரில் இஸ்ரேலிய பெஞ்சமின் நெதன்யாகு அரசு ராஜ தந்திர நடவடிக்கைகள் , போர் யுக்திகள் மற்றும் ஹமாஸ் உடனான தரைவழி போர் உட்பட அணைத்து வகையிலும் மிகப் பெரிய அளவில் தோல்வியை சந்தித்து விட்டது என்பதே இயன் பீமரின் கருத்தாக உள்ளது.

மற்றொரு பக்கம் கடத்தப்பட்ட பிணைக்கைதிகளை விடுவிக்கும் பொருட்டு தான் இது போன்ற சமாதானம் ஒப்பந்தத்திற்கு இஸ்ரேலிய இராணுவம் வந்ததாக கூறுவது முழுமையான உண்மையாக இருக்க அதிகம் வாய்ப்பு இல்லை என்பதே உண்மை. ஏனெனில், தமது நாட்டின் பொதுமக்களை கடத்தி போன மக்களின் நலனுக்காக மட்டுமே போர் நடத்த இஸ்ரேல் முன்வந்து இருந்தால் இஸ்ரேலிய இராணுவம் 15,000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் மற்றும் குழந்தைகளை படுகொலை செய்த பின்னர், என் நாட்டு மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கூறுவதில் எந்த நிலையிலும் நியாயம் இருப்பதாக தெரியவில்லை. அதனை நான்கு உணர்ந்துள்ள இஸ்ரேலிய அரச தலைமை வேறு காரணங்களை அடிப்படையாக கொண்டு தான் இந்த போர் நிறுத்தத்திற்கு சம்மதித்து இருக்க அதிக வாய்ப்பு உள்ளது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

அதேநேரத்தில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நாங்கள் காசாவை கைப்பற்றி அதன் பாதுகாப்பை தாமே ஏற்கப் போவதாகவும், பிணைய கைதிகளை முழுமையாக விடுவித்து ஹமாஸ் தீவிரவாத அமைப்பை இல்லாமல் முழுமையாக அழிப்பது ஒன்றே தமது நோக்கமாக இருப்பதாக சவால் விடுத்து போரில் ஈடுபட்டார். தற்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி பாலஸ்தீன கைதிகள் 350 பேரை விடுவிக்க நெதன்யாகு ஏன் ஒப்புக் கொண்டார் ? பயங்கரவாதத்தை தனது மண்ணில் நடத்தி விட்டு பல ஆயிரக்கணக்கான பொதுமக்களை படுகொலை செய்த ஹாமாஸ் படையினர் இடம் இஸ்ரேல் ஏன் சமாதானம் பேச வேண்டும். இது போன்ற கேள்விகள் அறிவுசார் சமூகத்தின் மத்தியில் ஏற்படுவது இயல்பான ஒன்றுதான் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய அரச தலைமை ஐ நா சபையை அணுகி ஹிஸ்புல்லா இஸ்ரேலை நோக்கி வீசும் ஏவுகணைகள் தாக்குதலை உடனே நிறுத்த வேண்டும் என்று இஸ்ரேவேல் ராணுவ அமைச்சர் கெலான் கோரிக்கை விடுத்த நிலையில். ஐ நா இந்த கோரிக்கையை முழுமையாக நிராகரிப்பு செய்து விட்டதாக கூறப்படுகிறது. இது மிகவும் முக்கியமான தோல்வி மற்றும் அவமானகரமாக இஸ்ரேலுக்கு அமைந்து விட்டது.

இஸ்ரேல் ராணுவம் தரைப்போரில் பல ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களை ஹமாஸ் படையினரின் தாக்குதலுக்கு பலியாகி உள்ளதாக அரேபியா ஊடகங்கள் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வருகிறது.

உலகில் இதுவரை வலிமையான டேங்கர்களாக அடையாளப்படுத்தப்பட்ட இஸ்ரேலிய டேங்கர்களில்(மெக்கோவா மற்றும் நாமல் வகை தொழில்நுட்ப ஆர்ட்டெலிரி 355 க்கு மேற்பட்ட வை முழுமையாக அழிக்கப்பட்டு உள்ளதாகவும் , இனி இதுபோன்ற கனரக டேங்கர்களை பயன்படுத்த முடியாத அளவிற்கு சிதைக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. அப்படி ஒரு நிலையில் அந்த டேங்கர் உட்புறம் பயணித்த ஆயிரக்கணக்கான இராணுவீரர்களின் கதி என்ன என்பதை நீங்களே யூகித்து ஒரு முடிவுக்கு வந்து விடுங்கள் . ஆனால், மேற்கத்திய ஊடகங்கள் இதனை தெளிவாக மறைத்து விட்டு செய்திகள் தரும் விதம் வருத்தம் அளிப்பதாக அமைந்துள்ளது .

இதனை ஹமாஸ் இயக்கத்தின் படைப்பிரிவின் ஊடக செய்தி தொடர்பாளர் அபூ ஹீபைதா மிகவும் தெளிவாக தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் இஸ்ரேலிய இராணுவம் இதனை இதுவரை மறுக்கவில்லை என்பதே உண்மையாகும். ஆனால் இஸ்ரேலிய இராணுவம் தாங்கள் இதுவரையில் 400 க்கு மேற்பட்ட சுரங்கப் பாதைகளை முழுமையாக அழித்து விட்டதாக பெருமை பேசிக் கொள்வதை நாம் இங்கு சுட்டி காட்ட விரும்புகிறேன்.

ஆனால் உண்மையில் இஸ்ரேலிய இராணுவம் தரைப்போரில் தனது வீரர்களை பெரும்பான்மையாக பலி கொடுத்துள்ளது என்பதே உண்மையாகும். அதனை இஸ்ரேலிய இராணுவம் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. மாறாக தரை போரில் தமது வீரர்களில் 80 பேர் மட்டுமே கொல்லப்பட்டதாக கூறி வருகிறது.

ஆனால், உண்மையில் இஸ்ரேலிய இராணுவத்தின் உடல்கள் பெரும் அளவில் அந்நாட்டின் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டு வருவதை வேறு செய்தினுடாக நாம் உறுதி செய்ய கூடியதாக அமைந்துள்ளது. இதனை தொடர்ந்து பலியான இஸ்ரேலிய இராணுவத்தின் உடல்களை அடக்க முடியாத அளவிற்கு கல்லறைகள் நிரம்பி வழிந்தாக மயானத்தின் நிர்வாகி கருத்து தெரிவித்து இருந்தார். இதனால் இஸ்ரேலிய நாட்டில் மக்களிடையே பெரும் பதட்டம் உருவானது. (சர்வதேச மீடியாக்கள் உண்மை செய்திகள் பலவற்றை முழுமையாக மறைத்து, எடிட் செய்து செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது)

அதனை தொடர்ந்து , லெபனானில் இருந்து செயல்படும் ஈரான் அரசின் ஆதரவைப் பெற்ற ஹிஸ்புல்லா என்கிற மிகவும் வலிமையான ஆயுத குழுக்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் இஸ்ரேல் திணறியது. இரண்டு தினங்களுக்கு முன்பு 500 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளை சுமந்து கொண்டு தாக்குதலை துல்லியமாக நடத்தும் அல் புர்க்கான் பாலிஸ்டிக் (Ballistic) ஏவுகணை தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவம் ஒட்டு மொத்தமாக நிலை குழைந்து போனது. ஒரேயொரு தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவ தளத்தில் பல நூற்றுக்கணக்கான யூத இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனாலும் இது குறித்து சர்வதேச ஊடகங்கள் எந்தவொரு சரியான தகவல்களையும் பகிர்ந்து கொள்ள ஏனோ மறுத்து விட்டது என்பதே கசப்பான உண்மையாகும். இஸ்ரேல் நாட்டின் உட்பகுதியில் அமைதியற்ற அச்சம் நிறைந்த சூழல் உருவாகியுள்ளது. எங்கு பார்த்தாலும் சைரன் ஒலி எழுப்புகிறது . உடனடியாக மக்கள் பதட்டம் அடைகிறார்கள். தொலை தொடர்பு கோபுரங்கள் முழுமையாக லெபனானில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் மூலம் தகர்த்து ஏறியப்பட்டுள்ளது. இதனை அல அரேபியா மற்றும் அல் ஜசீராவின் தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இஸ்ரேல் நாட்டில் வாழும் பொது சமூகத்தில் மிகுந்த அக்கறையுள்ள யூத மக்கள் பெஞ்சமின் நெதன்யாகுவை எதிர்த்து மிகப் பெரிய அளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் பலர் இஸ்ரேலிய அரச பிரதிகளை சந்தித்து மிகுந்த சினத்துடன் தனது கருத்துக்களை வலிமையான முறையில் எடுத்து வைத்தனர். ஏனெனில், அவர்கள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அரசியல் தனத்தை முழுமையாக வெறுக்கின்றனர். பெஞ்சமின் நெதன்யாகு என்கிற ஒரு தனி மனிதன் மட்டுமே இந்த போரைத் நடத்தி வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது. இந்த போரின் முடிவில் பெஞ்சமின் நெதன்யாகு ஆட்சியை இழந்து குற்றவாளியாக சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட அதிகம் வாய்ப்பு உள்ளது.ஏனெனில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்களை படுகொலை செய்த ஒரு வெறி பிடித்த தலைவருக்கு தண்டனை என்னவாக இருக்க முடியும் ??

இந்த இறுக்கமான கள சூழலில் சிக்குண்ட இஸ்ரேலிய நாட்டில் எல்லையோர லெபனான் பார்டரில் வாழ்ந்து வருகின்ற கிட்டத்தட்ட 2,50000 க்கு மேற்பட்ட பொதுமக்கள் உள்நாட்டில் அகதிகளாக முகாம்களில் தஞ்சம் புகுந்தனர் என்பது அவர்களுக்கு மேலும் கடுமையான அரசியல் நெருக்கடியை உருவாக்கி வருகிறது.

இந்த போரின் விளைவாக இதுவரை இஸ்ரேலிய அரசு 55 பில்லியன் அமெரிக்க டாலர்களை செலவழித்து உள்ளது. மிகப் பெரிய பொருளாதார சிக்கல்களை வரும் காலங்களில் அந்த தேசம் சந்திக்கலாம் என்பது தான் பெரும்பாலான பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

இந்நிலையில், சர்வதேச அளவில் இஸ்ரேல் அரசு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான போராக இதனை பிரகடனம் செய்த நிலையில் எந்தவொரு நாட்டில் இருந்தும் இஸ்ரேல் நாட்டிற்கு முழுமையான ஆதரவு கிடைக்கவில்லை என்பதே உண்மையாகும்.. இஸ்ரேல் நாட்டின் நட்பு நாடான பிரான்ஸ் நாடு இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீன மக்களை காப்பாற்ற இரண்டு மருந்து கப்பல்களை அனுப்பி வைத்தது. இது நிச்சயமாக இஸ்ரேலிய அரச தலைமைக்கு பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் இஸ்ரேலிய அரசும் , அதன் அரசியல் தலைமையும் அமெரிக்கா அரசிடம் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களை கேட்டு வருகிறார்கள். ஏனெனில், போர் நிறுத்தம் (truce) என்பது நான்கு நாட்களுக்கு மட்டுமே என்பதை அவர்கள் அதிகம் உணர்ந்து இருப்பதால் முன்னேற்பாடாக அமெரிக்கா அரசிடம் ஆயுத தேவை குறித்து பேசி வருகின்றனர். நிச்சயமாக அமெரிக்கா என்னதான் போர் நிறுத்தம் குறித்து வெளிப்படையாக பேசினாலும், அவர்கள் ஆயுதங்களை இஸ்ரேலிய இராணுவததிற்கு சப்ளை செய்வதை நிறுத்தப் போவதில்லை என்பதே சர்வதேச வல்லுனர்களின் பார்வையாக உள்ளது. இங்கே நான் ஒரு விடயத்தை சுட்டி காட்ட விரும்புகிறேன். இன்று வெளியான செய்தி ஒன்றில் நடுநிலை மற்றும் மனிதநேய சிந்தனை கொண்ட பெரும்பாலான இஸ்ரேலிய பொதுமக்கள் இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் அனைவரின் கைகளிலும் இரத்த சடுதிகள் படிந்து இருப்பதை ஆவேசத்துடன் எடுத்து கூறி வருகின்றனர். இஸ்ரேல் அரசும், ஆட்சியாளர்களும் பாலஸ்தீன மக்களுக்கு மிகப் பெரிய அளவில் தீமை விளைவித்து வருவதாகவே அவர்கள் எண்ணுவதில்லை எந்தவொரு தவறும் இருப்பதாக தெரியவில்லை. ஏனெனில், மனித குலத்தின் உண்மையான மரபுகளை அழிக்கும் நிலையில் எந்த ஒரு அரசும் செயல்பட முனையும் போது அதற்கு எதிரான வலிமையான குரல்கள் இயற்கையாகவே எழுச்சி பெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.இது தான் தற்போது இஸ்ரேல் நாட்டில் நடைபெற்று வருகிறது . ஒரு வேளை இந்த நிலை தொடர்ந்தால் இஸ்ரேல் நாட்டில் வாழும் பொதுமக்களில் அதிகமானவர்கள் அந்த நாட்டில் இருந்து வேறு தேசங்களுக்கு இடம் பெயரவே அதிகம் வாய்ப்பு உள்ளது.

இறுதியாக , இந்த போரில் அரபுகள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்ட மறுத்து விட்டது அவர்களின் சாபக்கேடு என்பதில் ஐயமில்லை. உலகில் இஸ்லாமிய மக்களின் தலைமை அரசாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட சவுதி அரேபியா அரச தலைமை எந்த விதத்திலும் நியாயம் தீர்க்க முன்வரவில்லை என்பது சர்வதேச முஸ்லிம் மக்களின் பெரும் மனக்குறையாகவே பார்க்கப்படுகிறது.

இது போன்ற அரபு தேசங்களின், நிலைகளைக் நன்கு உணர்ந்து கொண்ட மேற்கத்திய தேசங்கள் இவர்களை தங்களின் விசுவாசிகளாக மாற்றி விட்டார்கள் என்பது தான் கசப்பான உண்மையாகும்.



இதற்கிடையே ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகள் அரபு நாடுகளில் உச்ச கட்ட ஆதரவை பெறக்கூடிய வகையில் சென்ற சூழ்நிலை அமெரிக்காவிற்கு மிக கடுமையான பின்னடைவை மத்திய தரைக்கடல் பகுதியில் ஏற்படுத்தியுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் மட்டத்தில் ஆன அறிவுரைகள் அமெரிக்கா அரசை மிகுந்த கவலைக்கு உள்ளாக்கி இருக்க அதிக வாய்ப்பு உள்ளது. இந்த போரின் நிறைவில் மத்திய தரைக்கடல் பகுதியில் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் மிகப் பெரிய அளவில் மாறுதல்கள் உருவாக அதிகம் வாய்ப்புகள் உள்ளது என்பதை நான் இங்கே சுட்டி காட்ட விழைகிறேன்.

இந்த நிலையில் தான் அமெரிக்கா அரசு பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு மிக கடுமையாக முறையில் அழுத்தத்தை ஏற்படுத்தி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடைசியாக , இஸ்ரேலிய இராணுவம் உலக அளவில் ஏற்படுத்தி மாய பிம்பத்தை ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாக்கள் முழுமையாக உடைத்தெறிந்து வெற்றி பெற்று வருகின்றனர். இந்த போராளி குழுக்கள் இடம் இஸ்ரேலிய இராணுவத்தில் இருப்பது போன்ற எந்த வலிமையான ராணுவ தொழில்நுட்ப கருவிகள் இல்லை தான். இதே நிலையில் தான் ஆப்கானிஸ்தான் போரில் தாலிபான்கள் அமெரிக்கா இராணுவத்தை எதிர்த்து போராடி வெற்றி பெற்று நாட்டில் வலிமையான தேசிய அரசை நிறுவி உலகையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்கள்.அதே நிலை இங்கே ஏற்படாது என்று கூற எனக்கு வேறு எந்த காரணமும் இல்லை என்பதை நான் வலிமையாக தெரிவித்து கொள்கிறேன்.

ஹமாஸ் இயக்கத்தின் வலிமையான தாக்குதலினால் இஸ்ரேல் ராணுவத்தின் உளவுத்துறை, டேங்கர்கள் மற்றும் ஆயுதங்கள் என அனைத்து வகையான பிரமிப்பு கட்டமைப்புகளும் ஒன்றும் இல்லாமல் உருக்குலைந்து போனது என்பதே யாதார்த்தமான உண்மையாகும். இருப்பினும் பெரும்பாலான மக்கள் தங்கள் உயிர்களை இன்றும் இழந்து வருவது மிகுந்த வேதனை அளிப்பதாக அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற பல்வேறு போர்களில் அமெரிக்கா மிகப் பெரிய தோல்வியை சந்தித்து வரலாற்றை போன்ற ஒரு

வரலாற்று சம்பவம் இந்த போரினால் நிகழலாம் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், ஹமாஸ், ஏமெனில் போராடும் ஹொளதிகள், ஹிஸ்புல்லா மற்றும் ஏனைய ஜிகாதி குழுக்கள் சித்தாந்த ரீதியாக செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது இஸ்ரேலிய இராணுவததிற்கு எல்லா வகையிலும் பெரும் பின்னடைவை தான் ஏற்படுத்தும் வகையில் அமைந்து வருகிறது. காசாவிற்குள் நுழைந்து தாக்குதலை நடத்தி வரும் இஸ்ரேல் மிகப்பெரிய அளவில் தற்போது உயிரிழப்பை சந்தித்து வரும் நிலையில், இனி தொடரும் அடுத்த கட்ட போரில் வரும் நாட்களில் உயிரிழப்பு அதிகரிக்கவே அதிக வாய்ப்பு உள்ளது. இது போன்ற ஒரு நிலையை இஸ்ரேலிய சமூகம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராத சூழல் உருவாகும். அதேநேரத்தில், ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன பொதுமக்கள் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பது நிச்சயமாக ஒரு கசப்பான உண்மையாகும்.

அதேநேரத்தில், வலிமையான ஆயுத பலத்தை முழுமையாக கொண்ட ஹிஸ்புல்லாக்களின் செயல்பாடுகள் அதிகரிக்கும் சூழல் இஸ்ரேலிய இராணுவததிற்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தும். ஏனெனில், ஒரு முனையில் ஹமாஸ் மற்றொரு முனையில் ஹிஸ்புல்லாக்கள் என்பது இஸ்ரேலிய இராணுவததிற்கு பெருத்த பின்னடைவை முழுமையாக ஏற்படுத்தும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தற்போது, ஈரான் ஒரு வலுவான சக்தியாக பின்புறமாக இருந்து தான் இந்த போரை நடத்தி வருகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அதேநேரத்தில், அரபு நாடுகளின் மத்தியில் ஹமாஸ் அனுதாபத்தை பெறலாம் என்பதில் மாற்று கருத்து இருக்க வாய்ப்பே இல்லை. தற்போதைய நிலையில் சிரியா, துருக்கி, எகிப்து கத்தார் ஈரான் ஜோர்டான் போன்ற நாடுகளில் இருந்து ஏராளமான மறைமுக உதவிகளை ஹமாஸ் பெற்று வருகிறது . இதன் மூலம் ஹமாஸ் தொடரும் போரினால் தனது ஆயுத பலத்தை எல்லா வகையிலும் பெருக்கி கொள்ள அதிகம் வாய்ப்பு உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

தவறான முறையில் முடிவெடுத்த பெஞ்சமின் நெதன்யாகுவின் விரைவில் ஆட்சியில் இருந்த நீக்கப்பட அதிக வாய்ப்பு உள்ளது.அதே நேரத்தில் அமெரிக்கா தேர்தலில் ஜோபைடன் பின்னடைவை சந்திப்பார் என்கிற தேர்தல் ஆருடங்கள் வெளியாகி வருகிறது .

இஸ்ரேல் அரச தலைமை இந்த போரை பயங்கரவாதத்திற்கு எதிரான போராக சர்வதேச நாடுகளிடம் பிரகடனம் செய்ய முற்பட்டு கடைசியில் தோல்வியின் விளிம்பில் தான் தற்போது பயணித்து வருகிறது. 15,000 க்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் மற்றும் குழந்தைகளை படுகொலை செய்த ஒரு ஆட்சி தலைவன் எப்படி சர்வதேச பயங்கரவாதம் குறித்து பேச முடியும் ?

நாம் இறுதியாக ஒன்றை மட்டும் உறுதியாக கூற முடியும். இந்த போரின் முடிவில் அதன் வெற்றி, தோல்வியை தாண்டி இஸ்ரேல் எந்த வடிவத்தில் தனது அதிகாரத்தை காட்ட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விரக்தி அடைந்த நிலைக்கு முற்றிலுமாக மாறும். இந்த நிலைக்கு வரும் போது ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் விடுதலை சர்வதேச சமூகங்களால் உறுதி செய்யப்படும். அப்படி ஒரு சூழல் ஏற்படும் போதும் அதனை எதிர்க்க துணியும் எந்தவொரு தேசமும், தலைமையையும் ஒட்டு மொத்த மனித குலத்தின் எதிரியாகவே அனைவராலும் பார்க்கப்படுவார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அந்த மிகவும் விரைவில் வருகிறது என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும்.....!

அதன் முதுகெலும்புகள் முற்றிலுமாக உடைத்தெறியப்படும் என்னும் உண்மையை இங்கே பதிவு செய்து கொள்வதில் எமக்கு எந்தவொரு தயக்கமும் இல்லை என்பதே உண்மையாகும்....!



இர்பான் இக்பால்

# நிலை குலைந்த உலக நீதி

ஒரு நாட்டின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்று தீர்மானிக்கும் சக்தி தாமாக மாத்திரமே இருக்க வேண்டும் என்ற ஒரு பிரிவினரின் போதையினால் தீவுத் தேசமான இலங்கை மக்கள் எவ்வாறெல்லாம் வழி நடாத்தப்பட்டிருக்கிறார்கள், என்னென்ன விளைவுகளை சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கிரகித்துக் கொள்ளவே தலைமுறை தலைமுறையாக மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கையில், உலகம் எவ்வாறு இயங்க வேண்டும் என்று ஒவ்வொரு வகையான சித்தாந்தப் பிரிவினரும் உருவாக்கும் விளைவுகளையும் நாம் அவதானித்துக் கொண்டிருக்கிறோம்.

சில வேளைகளில், அதன் நியாய அநியாயங்களைப் பேசவும் சிந்திக்கவும் கூட பொதுத் தளத்திலிருந்து நம்மில் பலருக்கு மனமில்லாமலும் மனதில் இடமில்லாமலும் கூட இருக்கலாம். ஆயினும், நியதிகளுக்கும் நீதிக்குமிடையிலான வித்தியாசத்தை எல்லோரும் உணர்ந்தவர்களாகவே இருக்கிறோம். யுக்ரேன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பினை அவ்விரு நாடுகளுக்குமிடையிலான விவகாரமாகவும், இன்னொரு வகையில் உலக இயக்கத்தை தீர்மானிக்கும் சக்திகளாக இருக்க விரும்பும் பிரிவினருக்கிடையான போட்டியின் விளைவாக பார்ப்பதும் இரு வேறு கட்டாயம் புரியப்பட வேண்டிய விடயங்களாகும்.

எங்கு மனித உயிர்களுக்கு அநீதியிழைக்கப்பட்டாலும் அது அநீதியே. ஆயினும், இன்றைய உலக அரசியல் நாம் விரும்பி, விரும்பாத பல பாடங்களை நமக்குப் புகட்டிக்கொண்டிருக்கிறது. யுக்ரேன் மீதான படையெடுப்பைத் தொடர்ந்து எழுந்த சலசலப்பையடுத்து, கருத்துக் கூறிய ரஷ்ய வெளிவிகார அமைச்சர் ஸுகஸநபநல டுயஎசழஎ ஒரு விளக்கத்தை முன் வைத்தார். அதாவது: யாருக்கெல்லாம் யுக்ரேன் மீதான படையெடுப்பை சகித்துக் கொள்ள முடியவில்லையோ, அவர்கள் யுக்ரேனை பலஸ்தீனமாகப் பாருங்கள், ரஷ்யாவை அமெரிக்காவாகப் பாருங்கள், உங்களுக்கு விடை கிடைக்கும் என்றார். இந்த கருத்தின் மீதான ஆய்வையும் விவாதத்தையும் தவிர்த்து, இதன் ஆழத்தை அலசினால், மத்திய கிழக்கில் ஒரு இஸ்ரேலின் இருப்பு அமெரிக்காவுக்கு எத்தனை அவசியப்படுகிறதோ அவ்வாறே ரஷ்யாவின் அருகில் ஒரு இஸ்ரேல் அவசியப்படுகிறது என்ற சூட்சுமத்தையும் விளக்குவதை அவதானிக்கலாம்.

வல்லரசுகளின் யுத்த அரசியலுக்கு அப்பால், அப்பாவி உயிர்களின் அநீதியான முடிவுகளுக்காக வருத்தப்படாத யாரும் மனித உரிமை பேசுவதற்கான தகுதியையும் இழந்து விடுவர். ஒக்டோபர் ஏழாம் திகதி பலஸ்தீன மக்களின் விடுதலைக்காகப் போராடும் அமைப்பொன்றின் வலிந்த தாக்குதலுக்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இஸ்ரேல் ஏற்படுத்திய பேரழிவுகளுக்கும் மறுபுறத்தில் உலகுக்கு நீதி கற்பித்துக் கொண்டிருக்கும் மேற்கு நாடுகளின் முகங்களில் கரி பூசப்பட்டுக் கொண்டிருந்ததை சற்றுத் தாமதமாகவே மேற்கு நாடுகள் புரிந்து கொண்டன எனச் சொன்னால் அது மிகையாகாது. அதன் விளைவில், இன்று இக்கட்டுரை வரையப்பட்டுக் கொண்டிருக்கும் தருவாயில் யுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிடையே சிறைக் கைதிகள் பரிமாற்றமும் நடந்து கொண்டிருக்கின்றது.

இரு பக்கமும் தம் உற்றார், உறவினர் மற்றும் அன்பானோரைக் கண்டு, ஆறத்தழுவி அம்மக்கள் படும் ஆனந்தத்தை மனிதக் கண் கொண்டு பார்க்கையில் உள்ளாற மனம் அமைதி பெறும் உணர்வை உணர்ந்து கொள்ள முடியும். ஆயினும், தம்மால் உருவாக்கப்பட்ட போலி வாதங்களின் விளைவினால் 14000க்கு மேற்பட்ட உயிர்கள் பலியாகியிருப்பதைக் கொண்டு வல்லரசுகளின் கொள்கை வகுப்பாளர்கள் அமைதியடையவோ வருத்தப்படவோ போவதில்லை. மாறாக, தாம் நல்லவர்கள் - வல்லவர்கள் என்று காட்ட கடந்த சில தினங்களாக இஸ்ரேலின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளைக் கண்டிப்பது போன்ற கருத்துக்களை மாத்திரம் வெளியிட்டு வருகின்றன. இப்போது, மீண்டும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சரின் கருத்தை மீளாய்வு செய்தால், யுக்ரேனியர்களுக்காக மேற்குலகம் வடித்த கண்ணீரும் வெறும் நீலிக் கண்ணீர் தானா? என்ற கேள்வியும் எழும்.

பூகோளத்தின் இரு வேறு பகுதிகள் தொடர்பில் இரு வேறு நீதிகளைக் கடைப்பிடிக்கச் சென்று மேற்குலகம் அம்பலப்பட்டிருக்கும் இந்த தருணம், இன்னொரு நீதியைத் தேடும் பயணத்தை உலகம் ஆரம்பிக்கிறது என எடுத்துக் கொள்வதிலும் தவறில்லை. அமெரிக்காவின் வீட்டோ அதிகாரத்தினாலன்றி, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பையும் உயிரழிப்புகளையும் உலகம் பார்த்துக் கொண்டிருப்பதாக பொருளாகாது. சாதாரண மக்களின் உணர்வுகளை மதிக்காத அதிகாரப் பேச்சு எவ்வாறான விளைவுகளை, அதுவும் மேற்குலகம் வடித்திருக்கும் ஜனநாயகமே உருவாக்கும் என்பதற்கு, பலஸ்தீன ஆதரவு பேரணியில் பங்கு பற்றுவோர் குறித்து கடுமையாகப் பேசச் சென்று தனது பதவியைப் பறி கொடுத்த ஐக்கிய இராச்சியத்தின் உள்விவகார செயலாளர் சுவேலா பிராவர்மேன் சாட்சியாகிறார். ஆக, எந்த நியாயம் சரியானது? என்றொரு கேள்வியெழ முடியாது.

இத்தனை பேரழிவை சந்தித்தும் தம் மண்ணிலேயே வாழ்ந்து மடிய வேண்டும் என்ற பலஸ்தீனர்களின் சாதாரண வேட்கையைத் தாண்டிய இன்னொரு நீதியும் - நியதியும் கூட இருக்க முடியாது. ஆயினும், நான்கு நாள் யுத்த நிறுத்தத்தைக் கொண்டு மூச்செடுக்கும் நிலை குலைந்த நீதி அடுத்தடுத்து எதைக் கொண்டு வரப் போகிறது என்பதைப் பற்றிய அச்சத்தையும் கூட தவிர்க்க முடியாது. யுத்தமும் - இரத்தமுமற்ற பூமியொன்றைக் காணும் ஆவலுக்காக, கையேந்திப் பிரார்த்திப்பதைக் கை விடவும் முடியாது!

---

## ஐக்கிய இராச்சிய மடவளை பஸார் நலன்புரி சங்கத்தின் 18ம் வருடபொதுக் கூட்டம்

(ஷேய்க் முஹம்மது இஸ்மாயில்)

ஐக்கிய இராச்சிய மடவளை பஸார் நலன்புரி சங்கத்தின் 18 ம் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் (28. ஒக்) லெஸ்டர் மாநகரில் நகரின் Crown Hill Community College கேட்போர் கூடத்தில் பிற் பகல் 12 மணி முதல் 6 மணி வரை மிக சிறப்பாக இடம் பெற்றது.

இங்கிலாந்தின் சகல பாகங்களில் இருந்தும் மடவளை வாழ் மக்களும் அவர்களின் நண்பர்களுமாக சுமார் 400 பேர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

சிறுவன் ஸைத் கியாஸ் அவர்களின் அல்குர் ஆன் முரத்தலோடு பொதுக் கூட்டம் ஆரம்பமானது. தலைவர் ஷராஃப் ஸலீம் அவர்களின் தலைமை மற்றும் வரவேற்பு உரையைத் தொடர்ந்து செயலாளரின் வருடாந்த அறிக்கையும் பொருளாளரின் வருடாந்த கணக்கு அறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. சில திருத்தங்களோடு இரண்டு அறிக்கைகளும் பொது சபையில் ஆமோதிக்கப்பட்டன.

நிர்வாக சபையால் முன் வைக்கப்பட்ட இரண்டு திட்டங்களுக்கு போதுமான நிதியைப் பெறுவதற்கான வாக்குறுதிகள் சபையினரிடமிருந்து பெறப்பட்டன. மேலும் ஒரு திட்டம் குறித்து அதிக நேரம் கலந்துரையாடப் பட்டதோடு, குறித்த திட்டம் தொடர்பாக ஒரு விஷேட பொதுக் கூட்டம் (SGM) கூட்டப்பட வேண்டும் என பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் நிர்வாக சபைக்கு தேவையான ஐந்து அங்கத்தவர்கள் சபையிலிருந்து முன்மொழியப்பட்டு தெரிவு செய்யப் பட்டனர்.

இறுதியாக ஷெய்க் முஹம்மது இஸ்மாயில் அவர்களின் நன்றி உரையோடும் துவாவோடும் பொதுக் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

சகோதரர்களான உஸ்மான் அப்துஸ் சமத் தஸ்லீம் அனீஸ் ஆகியோர் புதிய நிர்வாக அங்கத்தவர்கள் தெரிவை வழிநடத்தியதோடு, வைத்தியர் ஆசிப் ஷஹியான் ஷ ாமில் கைர்டீன் ஆகியோர் புதிய திட்டங்களுக்கான நிதி திரட்டும் நிகழ்வையும் வழி நடத்தினர். இன்றைய பொதுக் கூட்டத்தை சகோதரர் இல்ஹாம் முனவ்வர் அவர்கள் அறிவிப்பாளராக இருந்து வழிநடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய இராச்சிய மடவளை பஸார் நலன் புரி சங்கமானது இங்கிலாந்தில் வாழும் மடவளை பஸார் மக்களால் 2005 ம் ஆண்டு இஸ்தாபிக்கப்பட்டு நிர்வகிக்கப் பட்டு வருகின்றது. மேலும் "உலகெங்கும் பறந்து சென்றாலும் பிறந்த ஊரை மறந்து விடாதீர்கள்" என்ற தெளிவான கோஷத்தோடு, தாம் பிறந்து வளர்ந்த மடவளை பஸாரில் பல் வகை நலன் பூரி வேளைகளில் கடந்த 18 வருடங்களாக வெற்றிகரமாக பணியாற்றி வரும் நலன் புரி அமைப்பு என்று கூறினால் மிகையாகாது.

இறைவனின் துணையால் மருத்துவ மனை, வாசிகசாலை, வாசிகசாலைக்கான புத்தகங்கள், பாடசாலைக் கட்டிடங்கள், பாடசாலைக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல், மதரசா கட்டிடங்கள்,மல சல கூடங்கள், புலமைப் பரிசில்கள்,கல்வித் பொதுத் தராதர சாதாரண மற்றும் உயர்தர செமினார் வகுப்புகள், புதிதாக இஸ்லாத்தில் வந்தோருக்கான வீடுகள், ஏழை மக்களுக்கான வீடுகள், விளையாட்டு உபகரணங்கள், ஏழை மாணவர்களுக்கான வகுப்பறை உபகரணங்கள்,நோயாளிகளுக்கான கொடுப்பனவுகள்,அவசர சத்திர சிகிட்சைக்கான கொடுப்பனவுகள், அங்கவீனர்களுக்கான விசேட வகுப்புக்கள், அவற்றின் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள்,விதவைத் தாய் மார்களுக்கான கொடுப் பனவுகள், சுய தொழி லுக்கான ஏற்பாடுகள், கோவிட் காலத்தில் உளர் உணவுப் பொதிகள் வழங்கல், ஸகாத், பித்ரா கொடுப்பனவுகள் என பல்வகையான நலன் புரி வேலைகளை தொடர்ந்தும் செய்து வருகிறது.

---

## குவைத் வாழ் வெளி நாட்டு சமூகங்களின் கூட்டுறவில் நிகழ்ந்த கடற்கரை சுத்திகரிப்பு நிகழ்ச்சி






குவைத்தில் இயங்கும் சமூக சேவை நிறுவனமான "ஜம்மியத்துல் இஸ்லாஹ்" வின் கீழ் இயங்கும் "மக்தப் தஆவுன் அல் இஸ்லாமி" ஏற்பாடு செய்திருந்த கடற்கரை சுத்திகரிப்பு நிகழ்ச்சி 24.11.2023 வெள்ளிக்கிழமை தினம் மிகவும் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. குவைத் நாட்டை சுத்தமாகவும், அழகாகவும் வைப்போம்" எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்வு அமைந்திருந்தது.

இந்நிகழ்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் வழிகாட்டல்களை "Kuwait Diving Team" வழங்கி உதவியது.

இந்நிகழ்வு குவைத் மற்றும் குவைத் வாழ் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆகிய பல நாடுகளைச் சேர்ந்த சமூகங்களின் ஒத்துழைப்புடனும், ஒருங்கிணைப்புடனும் நடந்து முடிந்தது. இதற்கு மேற்கூறிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 150 க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டிருந்தனர்.

சுற்றுச்சூழல் மாசடைதல் (Environmental pollution ) இன்று மனிதனும், தாவரங்களும், விலங்குகளும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பெரும் பிரச்சினையாகும். மனித செயற்பாடுகள் மூலம் உருவாகும் மாசுகளால், சூழலின் முக்கிய கூறுகளான காற்று (Air Pollution), நீர் (Water Pollution), மண் வளங்களும் (Soil Pollution), அங்கு வாழும் உயிரினங்களும் (Biodiversity loss) பாதிப்புக்குள்ளாகி , அதனால் இயற்கை சூழலின் சமநிலை சீரற்றுப் (Ecological imbalance) போவதால் முழு சூழற்றொகுதியுமே (Damaged ecosystem) பாதிக்கப்படுகிறது.

எனவே சூழல் மாசடையாமல் பாதுகாத்துக்கொள்வது சம்பந்தமான இவ்வாறான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் காலத்தின் தேவையாகும். விஷேடமாக மாணவர்களுக்கு, எதிர்கால தலைமுறையினரை கொண்டு இவ்வாறான நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படல் வேண்டும்.

---

## தர்ஹா நகர் ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் பிரத்தியேக வகுப்புகளின் ஆரம்ப நிகழ்வு

(பீ.எம் முக்தார்)







தர்ஹா நகர் ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வர்த்தக மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரத்தியேக வகுப்புகளின் ஆரம்ப நிகழ்வு தர்ஹா நகர் "இஃரா அத்துல் இஸ்லாம்" சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் நடை பெற்றது.

பிரதம அதிதியாக முன்னாள் மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தின் தலைவரும், ரூமி ஹாசிம் கல்வி நிலையத்தின் ஸ்தாபகரும், சமூக சேவையிலாருமாகிய கலாநிதி அல்ஹாஜ் ரூமி ஹாசிம், கல்வி நிலையத்தின் செயலாளர் சமூக சேவையாளர், Fine Cure முகாமையாளர் ஜஸ்ஃக் அஹமட் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

நிலைய இணைப்பாளர் ரபீஸ் ஹம்ஸா மற்றும் கல்வி நிலைய உறுப்பினர்கள், ஏராளமான பெற்றோர்கள், மாணவ மாணவிகள், ஊர் பிரமுகர்கள் கல்விமான்களும் நிலையத்தின் ஆசிரியர்களும் இதன்போது சமூகமளித்திருந்தனர்.

மேற்படி கல்வி நிலையம் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞான கல்விப் பிரிவையும் மிக வெற்றிகரமாக நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கல்வி நிலையத்தின் புனரமைப்பு பணிகள் தற்போது இடம் பெறுவதால் தர்ஹா நகர் "இஃரா அத்துல் இஸ்லாம்" சிறுவர் அபிவிருத்தி நிலைய புதிய கட்டிடத்தில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# நாணலென வளையும் அரசியலில் தும்பிக்கையில் துளிர்க்கும் மொட்டு!



சுஐப்,எம்,காசிம்

அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நண்பர்களும் இல்லை.

இதற்கு நாட்டின் இன்றைய அரசியல் களங்கள் நல்லதொரு சாட்சி. மக்களாணையால் வெற்றியீட்டிய ஜனாதிபதி ஒருவர், மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவருக்கு ஆட்சியை கைமாற்றியிருந்தார். உறவும் பகையும் அரசியலில் பிணைக்கப்பட்டுள்ள விதம் இதிலிருந்து புரிகிறது. நெருக்கடி நேரத்தில் உதவிய இந்த நட்பு இன்னும் நீடிக்கவே போகிறது. பட்ஜெட்டின் இரண்டாம் வாசிப்பு வெல்லப்பட்டிருப்பதிலிருந்து இதைப் புரிந்துகொள்ளலாம்.

ரணிலை எச்சரிக்குமளவுக்கு இந்த பட்ஜெட்டை பாவிப்பதற்குக்கூட பொதுஜன பெரமுன துணியவில்லை. வெளியாகியுள்ள தீர்ப்பும், எதிர்க்கட்சிகள் சூட்டியுள்ள பொருளாதார படுகொலையாளிகள் என்ற நாமமுமே இதற்கு காரணம். இந்தப் பெயரும் நீதிமன்றத் தீர்ப்பும் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரவேண்டிய அவசியத்தை அல்லது ஆபத்தை இவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இதனால்தான், எதிர்வரும் தேர்தல்களிலும் உடன்பாடு வரப்போகிறதென்ற செய்தியும் இந்த வெளிப்பாடுகளில் வெளிப்பட்டுள்ளன. முதலாவது ஆட்டத்திலே வெற்றியை எட்டும் வியூகங்கள்தான் இன்றைய களத்துக்கு பொருத்தம். இதனால், முதலில் தடுப்பாட்டத்தை தெரிவதே இவர்களுக்கு உள்ள வழி. இலக்கை நோக்கி ஆடுவதற்கு ஓட்டங்கள் தெரிய வேண்டுமல்லவா? எனினும், நாணய சுழற்சியில் வெல்ல வேண்டுமே! இந்த நாணயம் இப்போதைக்கு நிறைவேற்றதிகாரத்தின் கரங்களில் உள்ளதால் பொதுத் தேர்தலே பொருத்தமென்று வரும்.

கைமாறப்பட்டுள்ள அதிகாரத்தின் பலத்தில், பாராளுமன்றத் தேர்தலை நடத்தி, "நீ பாதி, நான் பாதி" என்ற பலத்துக்கு வந்த பின்னரே அடுத்த ஆட்டம் ஆரம்பமாகவுள்ளது. இதனால், அரசாங்கத்தை அமைக்கும் பங்கில் பாதியைப் பெறுமளவுக்கு பொதுஜன பெரமுன உழைக்கும். இந்தளவுக்கு முடியாவிடினும் இரவல் அதிகாரத்தில் இனியும் இல்லை என்பதை நிரூபிக்க ஐக்கிய தேசியக் கட்சியும் உழைக்கும்.

இந்த நட்பு நீடிக்கலாம் என்கிறேன். எனினும், நேரடியாக வர முடியாத சூழ்நிலையில் மறைமுகமான முயற்சிகளே முடுக்கிவிடப்படவுள்ளன. இதன் வெளிப்பாடுகள் படிப்படியாக வெளிவரத் தொடங்கியும்விட்டன.

தேர்தலுக்காக 10 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதென்ற அறிவிப்பு, அடுத்த வருடம் இரண்டு தேர்தல்கள் நடத்தப்படுமென்ற அறிவிப்பு மேலும், பொதுஜன பெரமுனவின் ஆதரவில் பட்ஜெட் வெல்லப்பட்டதெல்லாம் இவற்றையே ஐதீகம் கூறுகின்றன. ரணிலுக்கும் பெரமுனவுக்கும் கூட்டு உழைப்பு என்பதால் இங்கு வெடிப்புக்கோ அல்லது பிளவுக்கோ சாத்தியங்கள் இல்லாமலேயாகும்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் எழும் சங்கடங்களால்தான், அடிக்கடி அறிக்கைகள் உருமாறி ஒலிகளை எழுப்புகின்றன. இத்தேர்தலை நடத்தி "கிளீன்போல்ட்" ஆவதை விடவும் மோதிப்பார்க்க பொருத்தமான முடிவே இது. "கிளீன்போல்ட்" என்று உறுதியாகச் சொல்ல முடியாவிடினும், பொருளாதாரப் பாதிப்புக்கள் முடிவுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தினால் கதியென்ன?



பாராளுமன்றத்தில் இடம்பெறும் அநாகரீகங்கள் பழிவாங்கல்களின் மன விகாரங்களைத்தானே காட்டுகின்றன. மட்டுமல்ல, மக்களின் மனநிலைகளை அளவீடு செய்ய ஒரு ஆயத்தம் அவசியம். இந்த அளவீடாகவே பொதுத் தேர்தலுக்கு அழைப்பு வரப்போகிறது. மொட்டுவின் தற்போதைய திட்டம் இதுதான். இதனால், பொதுஜன பெரமுன இனியும் வாய் மூடி, வாளாதிருக்கப்போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இத்திட்டம் பிடிக்காமலிருக்காது. உள்ள ஒற்றை இலக்கத்தை இரட்டை இலக்கமாக அதிகரிக்க ஏற்ற வழியும் இதுதானே! கட்சியை அழித்தவர் என்ற பழியிலிருந்து ரணிலைப் பாதுகாக்கவும் இத்திட்டம் கைகொடுக்கலாம்.

பட்ஜெட்டின் இறுதி வாக்கெடுப்பும் வெல்லும் என்பதை இலகுவில் ஆரூடம் கூறும் கணக்கீடுகளே இவை. ஆனால், பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட நெருக்கடியை அரசியல் முதலீடாக மாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ள எதிர்க்கட்சிகளுக்கும் இந்த முடிவு சவாலாகவே அமையும். ஒட்டுமொத்தமாக எதிர்ப்பைக் கொட்டித்தீர்க்க இரு முனைப்போட்டிகள் நிலவவில்லையே!

பாராளுமன்றத் தேர்தலில் தனிப்பட்ட பிரபலங்களின் செல்வாக்குகள், பிரதேச போட்டிகள், மாவட்டத் தலைமைகளுக்கான போட்டிகளென பல வகைகள் உள்ளன. இந்த பல வகைகளுக்குள் பொது எதிரியை அடையாளம் காண்பது அரிதாகவே போகும். இதனால்தான், தடுப்பாட்டம் முதல் வரப்போகிறதோ! எப்படியோ ஒரு ஆட்டத்துக்கு தயாராக வேண்டிய தருணத்தில் நாட்டின் நிலைமைகள் உள்ளன.

சர்வதேச உதவிகளை இன்னும் நம்பியுள்ள நமக்கு, ஜனநாயகத்தோடு விளையாட இயலாதுள்ளது. மக்களாணைக்கு முரணான அரசாங்கங்களை சர்வதேசம் கண்டுகொள்வதுமில்லை, கணக்கெடுப்பதுமில்லை என்பதால்தான்,

நாட்டின் ஆடுகளங்கள் ஆயத்தப்படுத்தப்படுகின்றன. அரசியலில் மட்டுமல்ல விளையாட்டு ஆடுகளங்களையும் தரமுயர்த்தும் தேவையிலுள்ள நிலையில் வரப்போகும் தேர்தல் எப்படியிருக்கும்?

ஏற்கனவே, கூறியதுபோல நண்பர்களும், பகைவர்களும் நாணலென வளையும் அரசியலில், ஐக்கிய மக்கள் சக்தியும் மற்றும் தேசிய மக்கள் சக்தியும் எதையும் செய்யலாம். இலக்குகளை அடைவதில்தான் அம்புகள் குறியாக இருக்கும் என்பதைப் போல. வேட்டைக்காரன் வழித்தடங்கள் பார்த்து காட்டுக்குப் போவதில்லையே! என்னவோ, கர்மவினைகள் கண்டுகொள்ளாமலா விடும்!

# பாணந்துறை - தீனிய்யா அரபுக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு





(ஐ. ஏ. காதிர் கான்)

பாணந்துறை - பள்ளிமுல்லை, தீனிய்யா அரபுக் கல்லூரி (பழைய மாணவர் சங்கம்) ஆலிம்களின் புதிய நிர்வாகத் தெரிவு, கண்டி - மர்கஸ், லைன் ஜ/ம்ஆப் பள்ளிவாசலில், அகில இலங்கை ஜம் - இய்யத்துல் உலமா கண்டி மாவட்டக் கிளை பொதுச் செயலாளர் அல் ஆலிம் ஏ.எல். அப்துல் ககப்கபார் (தீனி) தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

முதலாவது நிகழ்வாக நடைபெற்ற மூன்று வருடங்களுக்கான (2023 - 2026) இப்புதிய நிர்வாகத் தெரிவில் புதிய நிர்வாக ஆலோசகர்களாக, அஷ் ஷேக் எஸ்.டி. முனவ்வர் தீனி (சியம்பளாகஸ்கொட்டுவ), அஷ் ஷேக் ஏ.எம். மர்ஸூக் தீனி (கலேவெல), அஷ் ஷேக் எஸ்.எச். எம். பாகயிஸ் தீனி (அக்குரணை), அஷ் ஷேக் எம்.எஸ்.எம். ரிபாகல் தீனி (மக்கொனை), அஷ் ஷேக் ஏ.எஸ். ஜஃ பகர் தீனி (அநுராதபுரம்), அஷ் ஷேக் ஏ.எல்.எம். மிஹ்ளார் தீனி (குருநாகல்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், தலைவர் : அஷ் ஷேக் ஏ.எல். அப்துல் கப்கபாகர் தீனி (கண்டி),

பிரதித் தலைவர்கள் : அஷ் ஷேக் எச்.எம். ஸமீல் தீனி (மினுவாங்கொடை), அஷ் ஷேக் எம். கே.எம். அலி தீனி (பாணந்துறை), அஷ் ஷேக் எம்.ரீ.எம். இக்ராம் தீனி (மொணராகலை),

பொதுச்செயலாளர் : அஷ் ஷேக் எம்.என்.எம். அன்பகஸ் தீனி (மாவனல்லை),

இணைச் செயலாளர் : அஷ் ஷேக் எம். முஆத் தீனி (கெக்கிராவ),

பொருளாளர் : அஷ் ஷேக் எம்.ஐ. ஸஃத் தீனி (கொழும்பு),

இணைப்பொருளாளர் : அஷ் ஷேக் எம்.ஏ.ஜீ. ஸலா/ஹத்தீன் தீனி (நிக்கவெரெட்டிய) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்போது நிர்வாக அங்கத்தவர்களாக் அஷ் ஷேக் ஏ.எச். எம். ஸலீம் தீனி (பாணந்துறை), அஷ் ஷேக் ஏ.எம். இக்ராம் தீனி (மன்னார்), அஷ் ஷேக் எம்.எஸ்.எம். முபீத் தீனி (கிண்ணியா), அஷ் ஷேக் எஸ்.எம். இஸ்மத் தீனி (அநுராதபுரம்), அஷ் ஷேக் எம். நளீம் தீனி (அநுராதபுரம்), அஷ் ஷேக் எம்ஆர்.எம். அப்துல்லாஹ் தீனி (கண்டி), அஷ் ஷேக் ஆர்.எம். ராயிஸ் தீனி (பாணந்துறை), அஷ் ஷேக் எம்.என்.எம். ஆமிர் தீனி (மள்வான), அஷ் ஷேக் ஏ.டப்ளியூ. பஸ்லுல் ஹக் தீனி (புத்தளம்), அஷ் ஷேக் எம்.எப்.எம். பாகஹிர்தீன் தீனி (மினுவாங்கொடை), அஷ் ஷேக் எம்.என்.எம். நஸ்ஹத் அலி தீனி (தர்காநகர்), அஷ் ஷேக் எம். எல்.எம். அஸீம் தீனி (தர்காநகர்), அஷ் ஷேக் எஸ்.எச்.எம். ஸப்ரின் தீனி (புத்தளம்), அஷ் ஷேக் ஆர்.எம். உமர் தீனி (புத்தளம்), அஷ் ஷேக் எம்.வை. அப்துர் ரஹ்மான் தீனி (கொழும்பு) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உலக பௌத்த மஹா சம்மேளனத்தின் தலைவருக்கு சர்வமத தலைவர்கள் வாழ்த்து!

உலக பௌத்த மஹா சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி தேசமான்ய சுதத் தேவபுர அவர்களின்

பிறந்தநாளான ஒக்டோபர் 31ம் திகதி,

கொழும்பு 07 பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள உலக பௌத்த மஹா சம்மேளனத்தின் தலைமையக பிரதான காரியாலயத்துக்கு,

சர்வமதத் தலைவர்களான கலாநிதி கௌரவ கலஹிடியே சுமன நாயக்க தேரர், சிவ ஸ்ரீ குமாரசுவாமி குருக்கள், அல்-ஹாஜ் அஷ்-ஸெயாயித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி மற்றும் கலாநிதி ரொமேஷ் பாதிரியார், கலாநிதி கிறிஸ்டோ பாதிரியார், ஷெஹான் பாதிரியார் ஆகியோர் விஜயம் செய்து தத்தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# பாணந்துறை கல்விக் கோட்டம் மட்டத்தில் ஜீலான் முதலிடம்



பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் 11 பேர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். பாணந்துறை கல்விக் கோட்டம் மட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் சித்தியடைந்த பாடசாலை இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் எம்.எச்.எப்./ஹமைட் அஹமட் (181), எம்.ஏ.எப்.நஜ்மா (177), எம்.ஏ.அஜ்மல் அஹமட் (165), எம்.ஆர்.ஆதிகா (161), எம்.எப்.எப். பஹாமா (161), ஆர். நுஹா (156), எம்.ஏ. இல்மா மர்யம்(155), எம்.என். எம்.முஆஷ் (151), ஐ.கே.எம்.ஆஷிப் (150), எம்.எப். ஸபா (147), எப்.அஸ்பா (147) ஆகியோருடன் கல்லூரியின் அதிபர். ஏ.எம்.ஹலீம் மஜீத் அவர்களும் உதவி அதிபரான எம்.எஸ். எம். யஸ்மின் கற்பித்த ஆசிரியைகளான எம்.எஸ்.ஸாலிமா பேகம், எம்.எம். எப். பர்ஹானா, எம்.ஏ.எப். றம்ஸியா, ஏ.ஆர். ஜூமானா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

சித்தியடைந்த மாணவர்களை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி குழுவினர் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

(யாழ். பரீட் இக்பால்)







# பலஸ்தீன பிரச்சினை சவூதியின் காத்திரமான பணிகள்

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சவூதி அரேபியா முன்னெடுத்த நடவடிக்கைகள் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகள் மற்றும் அவர்களது அங்கீகரிக்க முடியாத அத்துமீறல்களை எதிர்கொள்ளும் பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக அவர்களுக்குப் பக்கபலமாக இருப்பதே பலஸ்தீனப் பிரச்சினையில் சவூதி அரேபியாவின் நிலைப்பாடாக சவூதி அரேபிய இராச்சியத்தின் நிறுவனர் மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர்ரஹ்மான் ஆல் ஸஊத் காலத்திலிருந்து இன்றுவரை மாறாது நிலையாக இருந்து வருகிறது என இதனது வரலாற்றைப் படிக்கும் எவரும் முழுமையாக அறிவர்.

பலஸ்தீனத்தை ஆதரிக்கும் முதல் நாடக சவூதி அரேபியா வரலாற்று நெடுகிலும் இருந்து வந்துள்ளதோடு, இந்தப் பிரச்சினையானது அரேபியர்களின் முதன்மையான பிரச்சினை என்றும் பலஸ்தீனியர்கள் தாம் விரும்புவது போல் கிழக்கு ஜெருசலத்தை தலைநகராகக் கொண்ட அவர்களின் சுதந்திர நாட்டை மீளப் பெறுதல் என்ற இலக்கை அடைந்து கொள்ளும் வரை அனைத்து அரேபியர்களும் மற்றும் முஸ்லிம்களும் அதனை ஆதரிக்க வேண்டும் என்றும் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளது. சவூதி அரேபியா ஒரு தனி இராச்சியமாக ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை அதன் இஸ்லாமிய மதம் மற்றும் அரபு கலாசார கட்டமைப்பிற்குள் பலஸ்தீனியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உழைத்து வருகிறது. பலஸ்தீனிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அதன் முயற்சியில் அதன் தேசிய பாதுகாப்பை பல முறை ஆபத்துக்குள்ளாகியுள்ளது. எடுத்துக்காட்டாக, பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம் :

1. 1945ஆம் ஆண்டு, சவூதி அரேபிய இராச்சியத்தின் நிறுவனர், மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

“பலஸ்தீனப் பிரச்சினை முஸ்லிம்கள் மற்றும் அரேபியர்களின் சிந்தனைகளை ஆக்கிரமித்துள்ள மிக முக்கியமான விடயமாகும்”

2- 1945ஆம் ஆண்டில் மன்னர் அப்துல் அஸீஸ் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஆகியோருக்கு இடையேயான புகழ்பெற்ற வரலாற்றுச் சந்திப்பின் போது, பலஸ்தீனப் பிரச்சினையானது பல ஆண்டுகளாக இராச்சியத்தின் கொள்கைகளில் முதன்மையான, நிலையான பிரச்சினையாக இருக்கும் என்று புத்தகங்கள் மற்றும் கடிதங்களில் பதிவுசெய்யப்பட்ட இராச்சியத்தின் பார்வையை முன்வைத்தார்.

3- 1967 ஆம் ஆண்டு ஜூன் மாத பின்னடைவுக்குப் பிறகு, முஜாஹிதீன்கள் மற்றும் பலஸ்தீன உயிர்த் தியாகிகளின் குடும்பங்களுக்கு உதவ, மன்னர் ஸ/ஊத் பின் அப்துல் அஸீஸ் பொதுக் குழுக்களை உருவாக்கி, அதன் தலைமைப் பொறுப்பை அப்போது ரியாத் பிராந்தியத்தின் ஆளுநராக இருந்த இரண்டு புனிதத் தளங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மானிடம் ஒப்படைத்தார். இக்குழுக்கள் பன்னிரெண்டு அலுவலகங்கள் ஊடக, இராச்சியத்தின் பெரும்பாலான நகரங்களை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

4- 1964 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டிரியாவில் நடைபெற்ற இரண்டாவது அரபு உச்சி மாநாட்டில், பலஸ்தீன் தோற்றம் பெறுவதன் அவசியத்தையும், அது தொடர்ந்து நீடித்து நிலைப்பதற்காக அனைத்து வழிகளிலும் உதவவேண்டியதன் அவசியத்தை மன்னர் பைசல் வலியுறுத்தினார். அது மட்டுமல்லாது , அவர் பலஸ்தீனத்தை விடுவிக்க ஐந்து கொரில்லா பட்டாலியன்களை உருவாக்க ஐந்து மில்லியன் பிரிட்டிஷ் பவுண்களை நன்கொடையாக வழங்கினார். அவ்வாறே ஒக்டோபர் போரின்போது மேற்குலகிற்கு எண்ணெய் ஏற்றுமதியையும் நிறுத்தினார்.

5- 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மக்காவில் நடந்த உலக முஸ்லிம் லீக் மாநாட்டில் மன்னர் பைசல் இவ்வாறு கூறினார்.

“உங்களின் பிரச்சினைகளில் ஒன்றான பலஸ்தீன் பிரச்சினையை என்னால் புறக்கணிக்க முடியாது. அதன் அரசியல் கண்ணோட்டத்தில் நான் முன்வைக்கவில்லை, அதை இப்புவியில் வாழும் அனைத்து முஸ்லிம்களின் பிரச்சினையாக முன்வைக்கிறேன். சகோதரர்களே, இந்த பிரச்சினையானது திருடப்பட்ட பலஸ்தீனத்தின் பிரச்சினையாகும்.

6-1982 ஆம் ஆண்டில் இஸ்ரேல் லெபனானை ஆக்கிரமித்தபோது, பலஸ்தீனியப் போராளிகளுக்கு தேசிய பாதுகாப்பு மற்றும் இராணுவ ஆயுதக்களஞ்சிய சாலையில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வழங்குமாறு மன்னர் காலித் உத்தரவிட்டார். அவ்வாறே மேலதிக ஆதரவைக் கேட்ட யாசிர் அராபத் அவர்களுக்கு தனது சொந்தக் கணக்கில் இருந்து ஐந்து மில்லியன் டாலர்களை வழங்கினார்.

7- ஹிஜ்ரி 1407ஆம் ஆண்டில் ஹஜ் பிரசங்கத்தின் போது மன்னர் ஃபஹ்த் கீழ்வருமாறு உறுதிப்படுத்தினார்: “இஸ்லாமிய மற்றும் அரபு தேசத்தின் பிரச்சினைகளில் கூட்டு நடவடிக்கைகள் ஊடக நாங்கள் எங்கள் கவனத்தை செலுத்துகிறோம், அப்பிரச்சினைகளில் பா

பலஸ்தீனப் பிரச்சினை முதன்மையானது.

8- 2000ஆம் ஆண்டு ஜெரூசலம் உச்சி மாநாட்டில், மன்னர் அப்துல்லா, அப்போது பட்டத்து இளவரசராக இருந்தபோது இவ்வாறு கூறினார்: “கிழக்கு ஜெரூசலம் பிரச்சினையானது ஒரு அரேபிய பிரச்சினை, அதனை விட்டுக்கொடுக்கவோ, அது தொடர்பாக சமரசம் செய்யவோ முடியாது, எந்த சூழ்நிலையிலும் அதனைக் கைவிட முடியாது. ஜெரூசலமைப் பாதுகாக்கும் பொறுப்பு மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை விடுவிப்பது நம் அனைவரின் மீதும் உள்ள பொறுப்பாகும்”.

9- சவூதி அரேபியாவின் தார்மீக நிலைப்பாடு மன்னர் சல்மானின் வார்த்தைகளில் தெளிவாகத் தெரிகிறது: “அரபு அமைதி முயற்சிகளுக்கிணங்க, பலஸ்தீனப் பிரச்சினைக்கு நியாயமான மற்றும் நீடித்த தீர்வைக் காண்பதே அரசின் கொள்கை மற்றும் கொள்கைகளின் முன்னுரிமைகளில் ஒன்றாகும். பலஸ்தீனிய அரசை அதன் தலைநகரான ஜெரூசலத்தில் நிறுவுவதற்கும், சகோதர பலஸ்தீனிய மக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கும், இந்த பிரச்சினைக்கு ஆதரவாக இராச்சியம் தனது முயற்சிகளைத் தொடரும்.

1982 ஆம் ஆண்டு மொரோக்கோவில் பெஸ் நகரில் நடைபெற்ற அரபு உச்சி மாநாட்டில் மன்னர் பஹ்த் பின் அப்துல் அஸீஸின் சமாதானத் திட்டம் உட்பட, பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான பல மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் சவூதி அரேபியா அங்கம் வகித்துள்ளது. மன்னர் அப்துல் அஸ ீஸ் சமாதான திட்டமானது அரபு நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டதோடு, அரபு அமைதி திட்டத்திற்கும் பின்னர் 1991 இல் மெட்ரிட் நகரில் நடைபெற்ற அமைதி மாநாட்டிற்கும் அடிப்படையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. அரபு - இஸ்ரேலிய முரண்பாட்டுக்கான ஒரு தீர்வைக் காண்பதை நோக்காகக் கொண்டு மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் (அப்போதைய பட்டத்து இளவரசர்) அவர்களால் முன்மொழியப்பட்ட அரபு அமைதி முன் முயற்சியானது 2002 மார்ச் மாதம் பெய்ரூத் உச்சிமாநாட்டில் ஒரு ஒருங்கிணைந்த திட்டமாக அரபு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம் முயற்சியானது அமைதிக்கான சர்வதேச மட்டத்திலான தீர்மானங்களை இஸ்ரேல் செயற்படுத்தவும் பின்பற்றவும் வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்தது. ஜெரூசலம் நகரம் உட்பட 1967 ஆம் ஆண்டு முதல் ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்து அரபு பிரதேசங்களிலிருந்தும் முழுமையாக வெளியேறுதல், குடியேற்றங்களை அகற்றுதல் மற்றும் புனித ஸ்தலங்களில் அனைத்து மதத்தினருக்கும் வழிபாட்டு சுதந்திரம் மற்றும் மத சடங்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரவாதம் அளித்தல் போன்ற முக்கிய விடயங்களை இந்த உடன்படிக்கையானது உள்ளடக்கியிருந்தது.

1967 ஆம் ஆண்டு ஜெரூசலமைத் தலைநகராகக் கொண்டு பலஸ்தீனிய மக்கள் தங்கள் சுதந்திரமான, முழு இறையாண்மையை நிறுவுவதற்கான உரிமையையும், அகதிகள் மீண்டும் திரும்புவதற்கான உரிமையையும் சவூதி அரேபியா உறுதிப்படுத்தியதோடு, பலஸ்தீன மக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பு மற்றும் தொடர்ச்சியான இஸ்ரேலிய தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தக்கோரி சர்வதேச சமூகங்கள் தலையிட வேண்டும் மற்றும் கவனத்தை செலுத்த வேண்டும் என சவூதி தொடர்ந்து வலியுறுத்தியும் சர்வேதேச சமூகங்களுக்கு அழைப்பு விடுத்தும் வந்துள்ளது. இந்தச் சூழலில், இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனிய நிலங்களை இணைத்த ஒரு பிரிப்புச் சுவர் கட்டும் பணி இடம்பெற இருந்ததை கண்டித்ததோடு, ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் கண்டன அறிக்கை ஒன்றையும் சவூதி அரேபியா சமர்ப்பித்தது. இந்தச் சுவர் சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்த நீதிமன்றம், அதை இஸ்ரேல் அகற்ற வேண்டும் என்று ஆணையிட்டது.

இன்றைய சவூதி அரேபிய - பலஸ்தீன உறவை நாம் நோக்கினால், மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவுத் செய்த பாரிய மாற்றங்களை அவை பிரதிபலிக்கின்றன. அவர் பலஸ்தீனுடனான உறவை அதிக ஆக்கப்பூர்வமான தொடர்புகளாக மாற்றியுள்ளதை தெளிவாக எம்மால் காண முடிகின்றது என்பதே உண்மை. அவர் பலஸ்தீனிய பிரச்சினையை ஆன்மீக, தேசிய, உளவியல் மற்றும் மனிதாபிமான கண்ணோட்டத்தில் பார்த்தார். அவர் தனது இளம் பராயத்திலிருந்தே பலஸ்தீனியப் பிரச்சினை மீதான நுணுக்கமான பார்வையைக் கொண்டிருந்ததோடு, பலஸ்தீனியப் பிரச்சினையில் பலஸ்தீனுக்கான ஆதரவாளராக அர்ப்பணிப்போடு இணைந்திருந்தார். இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினையில் பலஸ்தீனின் பக்கம் உள்ள நியாயத் தன்மைகளை நன்றாக அறிந்தவர் என்ற வகையிலும் கள நிலவரங்களை பற்றிய நுணுக்கமான அறிவின் பின்னணியிலும் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்கள் பலஸ்தீனுக்கான தனது ஆதரவில் உறுதியாக இருப்பதோடு, பலஸ்தீன மக்களின் பக்கம் சர்வ வல்லமை பொருந்திய இறைவனும் இருக்கிறான் என்பதையும் அவர் கூறியிருந்தார்.

2018ஆம் ஆண்டில், ஜெரூசல் நகரை இஸ்ரேலின் தலைநகராக அமெரிக்கா அங்கீகரிப்பதாக ‘னுநயட ழுக வாந உநவெரசல’ என்ற ஒப்பந்தத்திற்கு அமைய பிரகடனம் செய்த போது மன்னர் சல்மான் சவூதியின் தஹ்ரான் நகரில் நடைபெற்ற 29ஆவது அரபு உச்சி மாநாட்டுக்கு “ஜெரூசலம் உச்சி மாநாடு” என்று பெயரிட்டதோடு, அவ்வுச்சிமாநாட்டில் அமெரிக்காவின் முடிவை நிராகரிப்பதாகவும் கிழக்கு ஜெரூசலம் பலஸ்தீனத்திற்குச் சொந்தமானது என்றும் அறிவித்தார். கிழக்கு ஜெரூசலமைத் தலைநகராகக் கொண்டு பலஸ்தீன மக்கள் தங்கள் சொந்த நாட்டைப் பெற உதவுவது அரபு நாடுகளுக்கு முதன்மையான முன்னுரிமை என்றும் அம்மாநாட்டில் அரபுத் தலைவர்கள் வலியுறுத்தினர்.

தற்போது பலஸ்தீனத்தின் காஸாவில், இஸ்ரேலியப் படைகளின் அத்துமீறல்களால் கடுமையான பிரச்சினைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் உட்பட பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளதோடு, தங்கள் சொந்த இனங்களில் இருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளனர். சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் சவூதி அரேபியா தலைமையில் நடைபெற்ற 32ஆவது அரபு உச்சி மாநாட்டில் இந்த பிரச்சினைகளைச் சரி செய்வது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது பற்றியும் ஏனைய பலஸ்தீன பிரச்சினைகளோடு தொடர்பான பல விடயங்களையும் அரபு தலைவர்கள் கலந்துரையாடியனர். மே மாதம் 2023 அன்று வெளியிடப்பட்ட ஜித்தா பிரகடனத்தில் பலஸ்தீனியர்களுக்கு எதிரான அவர்களது வழ்வாதாரம், சொத்துக்கள் மற்றும் உயிர்களை இலக்கு வைத்த இஸ்லேலியரின் கடுமையான வன்முறையை கண்டித்து அவர்களுக்கு நியாயமான தீர்வு வேண்டும் என்றும் அரபு தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பலஸ்தீன பிரச்சினையை நியாயமான முறையில் தீர்ப்பதையே அரபு தலைவர்கள் விரும்புகிறார்கள். இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் ஆகிய இரு பிரதேசங்களை கொண்ட இரண்டு தனி நாடுகளைக் கொண்டிருப்பதன் மூலம் அமைதியை உருவாக்க முடியும் என்பதை அவர்கள் எதிர்பார்ப்பதோடு, கிழக்கு ஜெரூசலமை அதன் தலைநகராகக் கொண்டும் குறிப்பாக, 1967 முதல் பலஸ்தீனுக்குச் சொந்தமாக இருந்த பகுதிகளிலும் பலஸ்தீனில் பூரண கட்டுப்பாடு நிலவ வேண்டும் என்பதையும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். பலஸ்தீன நிலத்தின் மீதான இஸ்ரேலின் கட்டுப்பாட்டை முடிவுக்குக் கொண்டு வரவும், தீர்வு காண்பதை கடினமாக்கும் நடவடிக்கைகளை நிறுத்தவும் உலக நாடுகளை ஜித்தா பிரகடனமானது வேண்டி நிற்கிறது.

காசா நகரில் அதிகரித்து வரும் வன்முறைகளைப் பார்க்க நாங்கள் இங்கு ஒன்று கூடியிருப்பது எங்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது. அப்பாவி பொதுமக்களின் உயிர்களும் உடைமைகளும் காவுவாங்கப்படுகின்றன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்களை குறிவைப்பதை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம். சர்வதேச மனிதாபிமான சட்டத்தையும் மனித உரிமைகளையும் கருத்திற்கொள்ள வேண்டும், பொதுமக்கள் மற்றும் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தும் வகையில் நடைபெறுகின்ற இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதன் அவசியம் மற்றும் அவர்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்கும் நிலைமைகளை உருவாக்குதல் வேண்டும். 1967ஆம் ஆண்டு இருந்த

09ம் பக்கம் பார்க்க...

08ம் பக்கத் தொடர்ச்சி...

எல்லைகளுக்குட்பட்ட வகையில் பலஸ்தீன அரசை அமைத்து அனைவரும் பாதுகாப்பையும் செழிப்பையும் அடையும் வகையில் நாட்டின் ஸ்திரத்தன்மை திரும்புவதற்கும் மற்றும் ஒரு நியாயமான தீர்வை அடைவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்பதோடு, நிரந்தர சமாதானத்திற்கான வழியையும் காண வேண்டும் என சவூதி அரேபியாவில் நடைபெற்ற வளைகுடா நாடுகள் மற்றும் ஆசியான் உச்சி மாநாட்டில் ஒக்டோபர் 20, 2023 அன்று நிகழ்த்தப்பட்ட தனது உரையில் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் தெரிவித்தார்.

நவம்பர் 11, 2023 அன்று ரியாத் நகரில் நடைபெற்ற அரபு - இஸ்லாமிய கூட்டு உச்சி மாநாட்டின் இறுதி அறிக்கையில், அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் காசா பகுதியில் போரை நிறுத்த முன்வருமாறு சவூதி அரேபிய இராச்சியத்திற்கு அழைப்பு விடுத்தனர், மேலும் அவர்கள் இஸ்ரேலியரின் பழிவாங்கும் வகையில் அமைந்துள்ள தாக்குதலை தற்காப்புத் தாக்குதல் என்று விவரிப்பதை நிராகரித்ததோடு, எந்த அடிப்படையிலும் அல்லது சாக்குப் போக்குகளின் கீழும் அத் தாக்குதல்களை நியாயப்படுத்தவும் முடியாது எனவும் கருத்துத் தெரிவித்தனர்.

காசா மீது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் திணிக்கப்பட்ட முற்றுகையை தகர்க்க வேண்டும் என்றும் அரேபிய, இஸ்லாமிய மற்றும் சர்வதேச மனிதாபிமான உதவித் தொடரணிகளை அந்தப் பகுதிக்குள் நுழைக்க வேண்டும் என்றும் அரபுத் தலைவர்கள் தெரிவித்தனர். அவ்வுச்சி மாநாட்டின் இறுதி அறிக்கையில் காசாவிற்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு, போர்க்குற்றங்கள் மற்றும் காலனித்துவ ஆக்கிரமிப்பு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான மனிதாபிமானமற்ற படுகொலைகள் ஆகியவற்றைக் கண்டித்ததுடன், உலக நாடுகளுக்கு, இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை ஏற்றுமதி செய்வதை நிறுத்துமாறும் வழியுறுத்தியது.

இந்த வகையில் சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர், இளவரசர் பைசல் பின் பர்ஹான், செப்டம்பர் 2023 இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது அமர்வுக்கு முன்னரான தனது உரையில், சவூதி அரேபியா, பலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தடையாக நடவடிக்கைகள் மற்றும் அமைதி முயற்சிகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அத்தனை செயற்பாடுகளையும் நிராகரிப்பதை உறுதிப்படுத்தினார்.

ஒக்டோபர் 18, 2023 அன்று இளவரசர் பைசல் பின் பர்ஹான், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளின் செயற்குழுவின் கூட்டத்தில் பல வெளியுறவு மந்திரிகளுடன் அவசர அவசரமாக ஒரு தொடர் சந்திப்பை நடத்தினார். இச்சந்திப்புகளின் போது, தற்போதைய காஸா மீதான அத்துமீறலை தடுக்க அனைத்து சர்வதேச மற்றும் பிராந்திய தரப்பினர்களை தொடர்புகொள்வதற்கான முயற்சிகளை சவூதி மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி, பலஸ்தீன விவகாரம் உட்பட மத்திய கிழக்கின் நிலைமை குறித்த பிரேசில் தலைமை தாங்கும் பாதுகாப்பு கவுன்சிலின் உயர்மட்ட விவாத அமர்வில் பிரேசிலின் பெடரல் குடியரசின் வெளியுறவு அமைச்சர் மௌரோ வியேரா அவரது அழைப்பை ஏற்று இளவரசர் பைசல் பின் பர்ஹானும் கலந்து கொண்டார்.

வெளிவிவகார அமைச்சர் நிகழ்த்திய ஓர் உரையில், எந்தவொரு தரப்பினரும் பொதுமக்களை குறிவைப்பதற்கான சவூதி அரேபியாவின் தெளிவான கண்டனத்தை அவர் தெரிவித்ததோடு, அத்துமீறல் மற்றும் கொலைகளை நிறுத்துதல், பணயக்கைதிகளை விடுவித்தல் மற்றும் சர்வதேச மரபுகள் மற்றும் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை சவூதி வலியுறுத்தவதாகவும் தெரிவித்தார். சவூதி தலைமை, சகோதர மற்றும் நட்பு நாடுகளுடன் தொடர்பு கொள்ள தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றதாகவும் இது தீவிரமான இரத்தக்கலரிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அவசர மற்றும் நடைமுறை தீர்வைக் கண்டறியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

காசாவில் வசிப்பவர்களுக்கு எதிராக இஸ்ரேலியரால் நடத்தப்படும் தாக்குதலை உடனடியாக நிறுத்துவதற்கான சர்வதேச சமூகத்தின் மெத்தனப் போக்கிலிருந்து நாங்கள் கண்டவை மற்றும் பலவந்தமான இடப்பெயர்வு நடவடிக்கைகள் என்பன நாம் எதிர்பார்க்கும் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு எங்களை நெருங்க விடாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு கவுன்சில் நிறுவிய பொறுப்புகளை ஏற்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும், இஸ்ரேலிய அத்துமீறல்களைத் தடுக்கவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவரவும், உணவு, தண்ணீர் மற்றும் மருந்து போன்ற மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகள் விரைவாக நுழைவதை உறுதி செய்வதற்கும் சர்வதேச சமூகம் உறுதியான மற்றும் தீவிரமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது எனபதையும் இளவரசர் பைசல் அவர் வலியுறுத்தினார்.

மனிதாபிமானம் உட்பட சர்வதேச மரபுகளை இஸ்ரேல் தொடர்ந்து அத்துமீறுகின்றது. அந்த வகையில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் பாதுகாப்பு கவுன்சிலுக்கு தனக்கு ஒதுக்கப்பட்ட பங்கை நிறைவேற்ற இயலாமல் போனது மற்றும் இந்த நெருக்கடிக்கு தீர்வு காணும் தீர்மானத்தை எட்டத் தவறியது. நீதி, சர்வதேச சட்டபூர்வமான வழிமுறைகளின் நம்பகத்தன்மை, கவுன்சிலின் பாதுகாவலர்களின் நம்பகத்தன்மை மற்றும் அமைதியை அடைவதற்கான அதன் இயலுமையை இச் செயற்பாடு கேள்விக்குள்ளாக்குகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

வெளியுறவு அமைச்சர் நட்பு நாடுகளைச் சேர்ந்த சகாக்களுடன் சந்திப்புகள் மற்றும் அழைப்புகளை மேற்கொண்டார். அச்சந்திப்பில் அவர்கள் காசாவில் உள்ள இராணுவ நிலைமை குறித்துப் பேசினர் மற்றும் பலஸ்தீனப் பிரச்சினை தொடர்பான சில ஐ.நா தீர்மானங்களை தொடர்ந்து வலியுறுத்தினர்.

குடிமக்களுக்கு தீங்கு விளைவிப்பதற்கு சவூதி அரேபியாவின் வலுவான எதிர்ப்பை அவர்கள் முன்னிலைப்படுத்தினர் மற்றும் உடனடிப் போரை நிறுத்தம், மனிதாபிமான உதவி அனுகல் மற்றும் காசாவில் இருந்து பலஸ்தீனியர்கள் கட்டாயமாக இடம்பெயர்வதை நிறுத்துமாறு வலியுறுத்தினர். காசாவில் இஸ்ரேலியப் படைகளின் நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டித்த அமைச்சர், உடனடிப் போர்நிறுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தியதோடு, பலஸ்தீன அரசை நிறுவுவதன் மூலமே அந்தப் பிராந்தியத்தில் அமைதி ஏற்படும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

சவூதி அரேபிய இராச்சியம் பலஸ்தீனியர்களுக்கு அவர்களால் சாத்தியமான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து வழங்குகிறது. மேலும் பலஸ்தீனிய பிரச்சினை மற்றும் பலஸ்தீனியர்களுக்கு சவூதி அரசியல், இராஜதந்திர மற்றும் மனிதாபிமான ரீதியாக ஆதரவுகளை அளித்து வருகிறது. காசா பகுதியில் இஸ்ரேலியப் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல் நாளில் இருந்து கடந்த நாட்களில் தொடர்தேர்ச்சியான உதவிகளை சவூதி அரேபியா வழங்கியுள்ளது. மேலும் இந்த ஆதரவின் சமீபத்திய வடிவமாக பட்டத்து இளவரசர் அவர்களின் வழிகாட்டல்களுக்கிணங்க, கிங் சல்மான் நிவாரண மையத்தின் "சஹேம்" தளத்தின் மூலம், காசா பகுதியில் உள்ள பலஸ்தீனிய மக்களுக்கு நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக நிதி சேகரிப்பதற்கான பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்காக மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் 30 மில்லியன் சவூதி ரியால்களை தனிப்பட்ட நன்கொடையாக வழங்கினார்.

அதேவேளை பட்டத்து இளவரசர் மற்றும் பிரதம மந்திரி இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல் அஸஸ் 20 மில்லியன் சவூதி ரியால்களை நன்கொடையாக வழங்கினார். காசா பகுதியில் உள்ள பலஸ்தீன மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பொதுப் பிரசாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக "சாஹிம்" தளம் சேகரித்த மொத்த நன்கொடைகளின் தொகை நவம்பர் 17, 2023 அன்று 518 மில்லியன் சவூதி ரியால்களையும் தாண்டியுள்ளது. நன்கொடைகள் சேகரிக்கும் பணிகள் தொடர்ந்தும் நடந்த வண்ணம் உள்ளன.

சவூதி அரேபியா காஸா பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக தொடர்ந்தும் நிவாரண உதவிகளை அனுப்பி வருகிறது. இதன் முதற்கட்டமாக , காசா பகுதிக்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்புவதற்காக, எகிப்தில் உள்ள அல்-அரிஷ் சர்வதேச விமான நிலையத்திற்கு ஆயிரக்கணக்கான தொன்கள் உள்ளடக்கிய பல்வேறு நிவாரண உதவிகளை சுமந்த நிவாரண விமானங்களை அனுப்பியது. அவ்வாறே நிவாரணப்பொருட்கள் அடங்கிய கப்பல்களையும் அனுப்பி வைத்தது. இவற்றுள் உணவு, மருந்து மற்றும் தங்குமிடம் பொருட்கள் அடங்கியுள்ளன. இவ்வுதவியானது, இரண்டு புனிதத் தளங்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பட்டத்து இளவரசர் மற்றும் பிரதம மந்திரி இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட, காசா பகுதியில் உள்ள பலஸ்தீனிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பொது நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும் . இது பலஸ்தீனிய மக்களுக்கு அவர்கள் சந்திக்கும் பல்வேறு நெருக்கடிகள் மற்றும் இன்னல்களில்களின் போது அவர்களுடன் நிற்பதாக வாக்களிக்கப்பட்ட சவூதி அரேபியாவின் வரலாற்றுப் பங்களிப்பின் ஒரு பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீனப் பிரச்சினையின் தொடக்கத்திலிருந்து, சவூதி அரேபியா பலஸ்தீனத்திற்கு பல பொருள் மற்றும் தார்மீக உதவிகளை வழங்கியுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. அவ்வுதவிகளை துறைகளின் வகைகளுக்கு ஏற்ப கீழ்வருமாறு அட்டவணைப்படுத்தலாம். (முதல் பத்து துறைகள்)

விளக்கம் தொகை (அமெரிக்க டாலர்களில்)

அபிவிருத்திக்கான உதவி - பட்ஜெட் ஆதரவு 2,343,666,667

பொது மனிதாபிமான உதவி - பல துறைகள் 1,063,938,530

அபிவிருத்திக்கான உதவி - பல துறை 675,000,000

பொது மனிதாபிமான உதவி - தங்குமிடம் மற்றும் உணவு அல்லாத பொருட்கள் 312,508,838

பொது மனிதாபிமான உதவி - ஆரம்ப மீட்பு 303.376.752

பொது மனிதாபிமான உதவி - சுகாதாரம் 188,074,543

பொது மனிதாபிமான உதவி - உணவு மற்றும் விவசாய பாதுகாப்பு 125,170,011

பொது மனிதாபிமான உதவி - கல்வி 63,748,185

அபிவிருத்திக்கான உதவி - அரசு மற்றும் சிவில் சமூகம் 50,000,000

பொது மனிதாபிமான உதவி - மனிதாபிமான நடவடிக்கைகளின் ஆதரவு மற்றும் ஒருங்கிணைப்பு 29,032,695

வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை 5.187.114.254

துறை வகை வாரியாக பலஸ்தீனத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் மொத்த எண்ணிக்கை

விளக்கம் எண்ணிக்கை

பொது மனிதாபிமான உதவி - உணவு மற்றும் விவசாய பாதுகாப்பு 63

பொது மனிதாபிமான உதவி - சுகாதாரம் 40

பொது மனிதாபிமான உதவி - தங்குமிடம் மற்றும் உணவு அல்லாத பொருட்கள் 33

பொது மனிதாபிமான உதவி - பல துறைகள் 32

அபிவிருத்திக்கான உதவி - கல்வி 22

பொது மனிதாபிமான உதவி - ஆரம்ப மீட்பு 18

அபிவிருத்திக்கான உதவி-பட்ஜெட் ஆதரவு 18

பொது மனிதாபிமான உதவி - கல்வி 17

பொது மனிதாபிமான உதவி - மனிதாபிமான நடவடிக்கைகளின் ஆதரவு மற்றும் ஒருங்கிணைப்பு 15

பொது மனிதாபிமான உதவி - நீர் மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரம் 4

திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 274

காலித் ஹமூத் அல்கஹ்தானி
இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர்







# அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை – 2023

நம் நாட்டின் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடிகளுள் ஒருவரான தெல்தோட்டை மண் ஈன்றெடுத்த அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் அவர்கள் இலக்கிய உலகுக்கு ஆற்றிய அரும்பணிகள் பற்றி இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் இந்த வருடமும் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரையினை நடாத்த தெல்தோட்டை ஊடக மன்றம் திட்டமிட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான நினைவுப் பேருரை "மலையக வரலாறும், ஈழத்து இலக்கியமும்" என்ற கருப்பொருளில் எதிர்வரும் நவம்பர் மாதம் 30ம் திகதி (வியாழக்கிழமை) மாலை 6.30 மணி முதல், கொழும்பு வை.எம்.எம்.ஏ. நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற உள்ளது. காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்வருட நினைவுப் பேருரை நிகழ்வில் பேருரையினை "மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியும், மலையக அடையாள உருவாக்கமும்" எனும் தலைப்பில் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர், எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர், பன்னூலாசிரியர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மயில்வாகனம் திலகராஜா அவர்கள் நிகழ்த்த உள்ளார்.




இந்நிகழ்வின் மற்றுமொரு முக்கிய அம்சமாக அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரை ஜனரஞ்சகப் படுத்தும் நோக்கில் மர்ஹூம் ஹஸன் ஆசிரியரினால் எழுதப்பட்ட அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் தொடர்பான மலரை இரு முறைகள் அச்சிட்டு வெளியிட்ட கல்ஹின்னை தமிழ் மன்றத்திற்கு தெல்தோட்டை ஊடக மன்றமானது, "அருள்வாக்கி நேசன்" விருது வழங்கி பாராட்டி கௌரவிக்க உள்ளது.

மேலும், அன்றைய தினம் தெல்தோட்டை ஊடக மன்றத்தின் கீழ் இயங்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் கலை, இலக்கிய கழகத்தினால் முகப்புத்தகத்தின் ஊடாக நடாத்தப்பட்ட சர்வதேச தரத்திலான கவிதை போட்டியில் வெற்றிபெற்ற கவிஞர்களை கௌரவித்தல், அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவு மலர் வெளியீடு உட்பட இன்னும் பல நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

# மட்டுவில் சுருங்கி வரும் பிரதேச செயலக நிலப்பரப்பு



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் எதிர்கொண்டு வரும் வாழ்விடத்துக்கான காணியில்லாப் பிரச்சினை நாடாளுமன்றத்திலும் எதிரொலித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற புள்ளிவிவரக் கையேட்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி, ஏறாவூர் நகரம், கோறளைப்பற்று மேற்கு - ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய 4 முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகள் சுருக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் கடந்த (2021) நொவெம்பெர் மாதம் 30ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விஷேட பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றியிருந்தார்.

இது விடயமாக அவர் கடந்த 2021 ஜூலை மாதம் 20ஆம் திகதி சமர்ப்பித்த பிரேரணைக்கு 2021 நொவெம்பெர் 30இல்தான் அனுமதி கிடைத்திருந்தது.

அந்த விஷேட பிரேரணை உரையில் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்திருந்ததாவது, பனம்பலான ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி 2000ஆம் ஆண்டு நாட்டில் புதிதாக 8 பிரதேச செயலாளர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

கொழும்பில் ரத்மலானை, களுத்துறையில் இங்கிரிய, ஹம்பாந்தோட்டையில் வலஸ்முல்ல, பதுளையில் லுணுகலை, அம்பாறையில் - சாய்ந்தமருது மற்றும் நாவிதன்வெளி, மட்டக்ளப்பில் கோறளைப்பற்று மத்தி (முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகம்) கோறளைப்பற்று தெற்கு (தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகம்) ஆகியவையே புதிதாக உருவாக்கப்பட்டு இன்றளவும் இயங்கி வருகின்றன.

ஆனால், இதில் விநோதம் என்னவென்றால் மட்டக்களப்பில் முஸ்லிம்களுக்காக உருவாக்கப்பட்ட கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் இன்னமும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்படாமலும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பு பகிர்ந்தளிக்கப்படாமலும் இருந்து வருகின்றது.

அதேவேளை, மட்டக்களப்பில் இன்னொரு மாயமான விடயமும் நடந்து வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற புள்ளிவிவரக் கையேட்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பரப்பளவும் எல்லைகளும் சுருக்கப்பட்டு வருகின்றன என்பதை நிலப் பரப்பு சம்பந்தமான புள்ளி விவரங்கள் காண்பிக்கின்றன.

எடுத்துக்காட்டாக, 1992ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட புள்ளி விவரக் கையேட்டில் காத்தான்குடிப் பிரதேச செயலாளர் பிரிவு 9.96 சதுர கிலோமீற்றர் (2460 ஏக்கர் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 6.6 சதுர கிலோமீற்றர் (1630 ஏக்கர்) ஆகவும் 2019இல் 6 சதுர கிலோமீற்றர் (1482 ஏக்கர்) ஆகவும் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, 1992இல் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 3.74 சதுர கிலோமீற்றர் (923 ஏக்கர்) என்றும் 2015ஆம் ஆண்டில் அதன் பரப்பளவு 2.86 சதுர கிலோமீற்றர் (706 ஏக்கர்) ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 1995இல் 176 சதுர கிலோமீற்றர்களாக உள்ள நிலையில் 2013இல் வெறும் 17 சதுர கிலோமீற்றர் என்றும் மாற்றப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, புதிதாக உருவாக்கப்பட்ட மட்டக்களப்பின் மற்றொரு முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவான கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 2001ஆம் ஆண்டில் 240 சதுர கிலோமீற்றர் என்றிருந்தது. அது 2006இல் 148 சதுர கிலோமீற்றராகவும் 2013இல் 80 சதுர கிலோமீற்றராகவும் 2015இல் 7.78 கிலோமீற்றராகவும் 2019இல் 6 சதுர கிலோமீற்றராகவும் மாற்றப்பட்டிருக்கின்றது.

அதேவேளை, 2002, 2003, 2004, 2005ஆம் ஆண்டுகளுக்கான வாக்காளர் இடாப்பில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தினால் புணாணை கிழக்கு 211பி ரிதீதென்ன 211எச் மற்றும் காரமுனை 211ஜி-2 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களின் வாக்காளர் பட்டியல்களும் தொடர்ந்து பதியப்பட்டு வந்துள்ளன.

ஆனால், மாயமாக 2006ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் மிகவும் இரகசியமான முறையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் புணாணை கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் அரைவாசிப் பகுதியும் ரிதீதென்ன கிராம அலுவலர் பிரிவின் அரைவாசிப் பகுதியும் மீண்டும் கோறளைப்பற்று வடக்கு எனும் வாகரை தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில் பார்த்தால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவும் சுருக்கப்பட்டு வருவதுடன் முஸ்லிம் கிராமங்களும் கபளீகரம் செய்யப்படுகின்றன.

2020ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் புள்ளிவிவரப்படி 424379 என்ற அடிப்படையில் 73.8 வீதம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். விகிதாசாரப்படி நோக்கினால் 73.8 வீதம் உள்ள தமிழர்களுக்கு 2584 சதுர கிலோமீற்றர் பரப்பளவான நிலங்களும் 150457 என்ற எண்ணிக்கையில் 26.1 வீதம் உள்ள முஸ்லிம்களுக்கு 800 சதுர கிலோமீற்றர் காணிகளும் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் நிருவாகத்தின் பாரபட்ச நில ஒதுக்கீடு காரணமாக 26.1 என்ற விகிதாசாரத்தில் வாழ்கின்ற முஸ்லிம்கள் வெறும் 16 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்குள்ளேயே அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளார்கள்." என்று அந்தப் பிரேரணையில் நஸீர் அஹமட் எம்.பி குறிப்பிட்டிருந்தார்.

சரித்திரபூர்வமாகத் தொடரும் முஸ்லிம் பிரதேசங்களைத் தலையெடுக்க விடாமல் தடுக்கும் முயற்சிகள்.

மர்ஹு/ம் டாக்டர் அஹமட் பரீட் மீராலெவ்வை அவர்களால் ஏறாவூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் (பிரதேச செயலகம்) நிறுவ முன்னெடுக்கப்பட்ட முயற்சி




(மொறகொட ஆணைக்குழு)

1979ம் ஆண்டு இலங்கையில் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உருவாக்கவும் உள்ளூராட்சி மன்றங்களின் தரங்களை மாற்றியமைப்பதற்காகவும் மொறகொட ஆணைக்குழு எனும் பெயரில் ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இக்குழுவுக்கு ஏறாவூர் மக்களின் அபிலாசைகளைத் தெரிவிக்க வேண்டும் என இவ்வூர்ப் புத்திஜீவிகள் முனைப்புடன் செயற்பட்டு அப்போதைய மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் சமூக சேவைகள் இராஜாங்க அமைச்சருமான மர்ஹூம் டாக்டர் அஹமட் பரீட் மீராலெப்பை அவர்களின் ஏற்பாட்டில் ஏறாவூர் அல்முனீரா மகாவித்தியாலயத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு, ஏறாவூர் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மொறகொட ஆணைக்குழுவுக்கு கையளிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி கடல் வளம், வயல், மேய்ப்பு நிலம், குளம் என்பவைகளை உள்ளடக்கிய பகுதிகளுக்குரிய படங்களுடன் ஏறாவூர் பட்டினாட்சி மன்றத்தை நகரசபையாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மகஜர் தயாரிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டது.

மேற்படி ஆணைக்குழு பல பிரதேசங்களுக்கும் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு, உள்ளூராட்சிமன்ற தரமாற்றங்கள் என்பவற்றுக்குப் பரிந்துரை செய்தது.

இதன்படி ஏறாவூர் தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் நகர சபையாகவும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

வன்னி மாவட்டத்தின் பல பகுதிகளில் இந்த ஆணைக் குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்பட்டன.

ஆனால், அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கல்குடாத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே. டபிள்யூ. தேவநாயகத்தின் தலையீட்டினால் ஏறாவூர் தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவும் நகர சபையாகவும் தரமுயரத்தப்படும் முன்னெடுப்புக்கள் அமுல் செய்யப்படாமல் தடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட முயற்சி

பிரதேச செயலக எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான ஆணைக்குழு 10.05.1996ல் கொழும்பு, உள்நாட்டலுவல்கள் அமைச்சில் சாட்சியங்களைப் பதிவு செய்தது.

ஏறாவூர் மக்களின் சனத்தொகைக்கேற்ப விகிதாசார முறையில் வயல் நிலம், மேய்ச்சல் நிலம், குடியேற்ற நிலம், மீன்பிடி வளம், அறிக்கை, வரைபடம் என்பவைகளை உள்ளடக்கிய முழுமையான ஆவணத் தொகுதியொன்று ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சார்பாக அல்ஹாஜ் எம். ஏ. சீ. அப்துல் றஹ்மான், அல்ஹாஜ் வை. எம். அப்துல் காதர் அல்ஹாஜ் யூ. எல். எம். ஹனிபா ஆகியோரால் தயாரிக்கப்பட்டிருந்தது.

அந்த ஆவணங்களை உள்ளடக்கிய அறிக்கை அப்போதிருந்த ஏறாவூர் பிரதேச செயலாளர் கே. விமலநாதன், நிருவாக உத்தியோகத்தர் எம்.கே முஹைதீன் ஆகியோர்களினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அந்த மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா முன்னெடுத்துச் சென்றிருந்தார். இதன்படி பிரதேச செயலக எல்லை நிர்ணயிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டபோதும் அப்போதிருந்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே. பத்மநாதன் அதனைச் சிபார்சு செய்யாத காரணத்தினால் வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

(மட்டக்களப்பு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணியில்லாப் பிரச்சினை வரும் வாரமும் வரும்)












# ராஜபக்ஷக்களின் குடியுரிமை பறிக்கப்படுமோ?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

நாட்டு மக்கள் தேர்தல் குறித்து நம்பிக்கை இழந்துள்ள நிலையில் அடுத்த வருடம் நடாத்தப்பட வேண்டியிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் திட்டமிட்ட அடிப்படையில் நடாத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஒரு உறுதிமொழியை வழங்கியுள்ளார். 2023.11.22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். ஜனாதிபதியின் இந்த உறுதிமொழி தேர்தல் குறித்து நம்பிக்கை இழந்துள்ள மக்களுக்கு மீண்டும் புதியதொரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இருந்தாலும் இந்த வரவு செலவுத் திட்டம் குறித்து விமர்சனங்களை செய்யும் பொருளியல் அவதானிகள் பலர் இது ஒரு தேர்தல் வரவு செலவுத் திட்டமாக இருக்கலாம் என்ற ஊகங்களை வெளியிட்டுள்ளனர். ஆனாலும் வெளிப்படையாக குறித்த தேர்தல்களுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்று வரவு செலவுத் திட்டத்தில் குறித்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய அதுபற்றி தெரிவிக்கையில் அடுத்த வருடம் தேர்தலுக்காக 1000 கோடி ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக உறுதியளித்துள்ளார். அவ்வாறாயின் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் ஒன்றில் ஜனாதிபதித் தேர்தலுக்கு அல்லது பொதுத் தேர்தலுக்கான அறிவித்தல் செய்யப்பட வேண்டும். யதார்த்தமாக அரசியல் அமைப்பை மீறாமல் அரசு நடந்துகொள்ளுமாயின் முதலில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் செய்யப்பட வேண்டும். இந்நிலையில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் 2025 ஆம் ஆண்டு நடைபெறும் என்றும் கூறினார்.

தற்போது பாராளுமன்றத்தில் நடைபெற்று வருகின்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் அடிக்கடி பேசப்படுகின்ற விடயங்களாக இரண்டு பிரதான விடயங்கள் இருந்து வருகின்றன. முதலாவது விடயம் நாட்டின் பொருளாதார சரிவுக்கும் வங்குரோத்து நிலைக்கும் காரணமானவர்களாக முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோதாபய ராஜபக்ஷ, பொருளாதார திட்டமிடல் மற்றும் நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் ஆளுனராக இருந்த அஜித் நிவாட் கப்ரால், பி.பி. ஜயசுந்தர உள்ளிட்ட குழுவினர் பற்றியதாகும். அடுத்த விடயமாக பேசப்பட்டு வருவது இலங்கை கிரிக்கட்டிற்கு சர்வதேச கிரிக்கட் கவுன்சில் விதித்துள்ள தடை மற்றும் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் ஊழல்கள் பற்றிய விடயமாகும்.

இதில் முக்கியமாக 2023.11.21 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சுட்டிக்காட்டி நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்து நாசப்படுத்தி 2 கோடி 20 இலட்சம் மக்களது அடிப்படை உரிமைகளை மீறியவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாக நாட்டின் உன்னதமான சட்டம் இயற்றும் சபையான பாராளுமன்றம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்ற கேள்வியை எழுப்பினார். இந்த கேள்வியால் பாராளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதோடு ஆளும் கட்சித் தரப்பு உறுப்பினர்களின் ஆத்திரத்தை தூண்டுவதாகவும் அது இருந்தது. எதிர்க்கட்சித் தலைவரின் இந்த கேள்வியால் ஆளும் கட்சித் தரப்பு உறுப்பினர்களில் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு விசுவாசமானவர்கள் பலர் கடுமையாக ஆவேசப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது. அவ்வாறே ஆளும் கட்சி தரப்பு உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான சனத் நிசாந்த சபாநாயகரின் முன்னிலையிலேயே பாய்ந்து வந்து எதிர்க்கட்சித் தலைவரின் கையில் இருந்த கேள்விக் கொத்து அடங்கிய ஆவணங்களை பலவந்தமாக பறித்து எடுத்தார்.

இந்த முறைகேடான சம்பவம் காரணமாக சபையில் மேலும் குழப்பநிலை ஏற்பட்டது. சனத் நிசாந்தவின் இந்த செயற்பாடானது பாராளுமன்ற நிலையியல் கட்டளைகள் சட்டத்தின்படி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் உரிமை மீறப்பட்டதாகவும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதே நேரம் இந்த பொருளாதார கொள்ளைக்காரர்களாக சுட்டிக் காட்டப்பட்டவர்களின் குடியியல் உரிமை பறிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் சஜித் பிரேமதாச முன்வைத்தார்.

எவ்வாறாயினும் சனத் நிசாந்த தொடர்பாக கவனம் செலுத்தியுள்ள சபாநாயகர் அவரது ஒழுங்கீனமான நடத்தைக்கு தண்டனையாக அவருக்கு இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்றத்திற்கு வர வேண்டாம் என்ற தடையை அறிவித்துள்ளார். ஆனால் இந்த இரண்டு வார தடை போதுமானதல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் அதிருப்தி தெரிவித்துள்ளார். ஏற்கனவே இதுபோன்று ஒழுங்கீனமாக நடந்துகொண்ட உறுப்பினர் அஜித் மானப்பெருமவுக்கு ஒருமாத கால தடைவிதிக்கப்பட்டது. ஆனால் சனத் நிசாந்த ஆளும்கட்சி உறுப்பினர் என்பதால் இவ்வாறு இரண்டு வார தடையா என்ற அதிருப்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. அதே நேரம் உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி நாட்டின் பொருளாதாரம் அதள பாதாளத்திற்கு தள்ளப்பட காரணமானவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்ட ராஜபக்ஷகளின் குடியியல் உரிமையை பறிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சமகி ஜனபலவேகய (ஐக்கிய மக்கள் சக்தி) நாடளாவிய ரீதியில் கையெழுத்துக்களை திரட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது.

இவ்வாறு திரட்டப்படும் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும். அதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக ஆராய விஷேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து அதன் ஊடாக விசாரணைகள் நடாத்தப்பட்டு அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக மஹிந்த ராஜபக்ஷ, கோதாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் குடியியல் உரிமைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இந்த கையொப்ப வேட்டையை 2023.11.23 ஆம் திகதி புறக்கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் இருந்து ஆரம்பித்து வைத்து எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மறுபுறமாக சர்வதேச கிரிக்கட் கவுன்சில் இலங்கை கிரிக்கட் அணியின் நடவடிக்கைகளுக்கு தடைவிதித்திருப்பதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை குற்றம் சாட்டியதோடு தூர நோக்கம் இல்லாமல் நிறைவேற்றப்பட்ட பிரேரணை காரணமாகவே இலங்கை கிரிக்கட்டில் அரசியல் கலந்துவிட்டதாகவும், கிரிக்கட் மீது சர்வதேச தடை விதிப்பதற்கும் அதுவே காரணம் என்றும் குற்றம்சாட்டினார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற வரப்பிரசாதங்களை பயன்படுத்தி நீதிபதிகளை குற்றம்சாட்டி குறை கூறியமை தவறானது. அதேபோன்று விளையாட்டுத் துறை அமைச்சர் இலங்கை கிரிக்கட் கவுன்சில் பற்றி பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதாலும் எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்த பிரேரணையை ஆளும் கட்சியினரும் ஆதரவளித்து நிறைவேற்றியமையாலும் இலங்கை கிரிக்கட்டிற்கு இருள் சூழ்ந்த எதிர்காலம் ஆரம்பமாகியதாகவும் அவர் கடுமையாக சாடினார்.

ஜனாதிபதியின் இவ்வாறான குற்றச்சாட்டானது பாராளுமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையில் ஒரு முரண்பாட்டை தோற்றுவித்திருப்பதை தெளிவாக வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது. ஏற்கனவே அரசியல் அமைப்பு பேரவைக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருக்கின்றது. பொலீஸ் மா அதிபரின் பதவிக்கால நீடிப்பு தொடர்பாகவே இந்த முரண்பாடு உருவாகி இருக்கின்றது. ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ள பதவிக்கால நீடிப்பை அரசியல் அமைப்பு பேரவை நிராகரித்திருக்கின்றது. ஆனாலும் அரசியல் அமைப்பு பேரவையின் முடிவை மீறி ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி தமக்கு அரசியல் அமைப்பின்படி அதிகாரம் இருக்கின்றது என்று மீண்டும் பதவி நீடிப்பை வழங்கினார். ஆனாலும் அந்த பதவி நீடிப்பை அரசியல் அமைப்பு பேரவை மீண்டும் நிராகரித்திருக்கின்றது. அதன்படி சட்டவாக்க சபை என்ற வகையில் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை ஜனாதிபதி விமர்சித்து வருவது ஒருபுறம் இருக்க அரசியல் அமைப்பு பேரவையை மதிக்காமல் நடந்துகொள்ளும் ஜனாதிபதியின் போக்கானது மேலும் நிலைமைகளை சிக்கலாக்கி வருகின்றது.

பாராளுமன்ற ஜனநாயக மரபுகளை பின்பற்றும் நாடு என்ற வகையில் ஜனநாயகத்தின் அடிப்படை பண்பாக அமைவது சட்டம், நீதி, நிர்வாகம் ஆகிய முத்துறைகளும் சுதந்திரமாக இயங்க வேண்டும். அதனையே வழுவேறாக்கம் என்று அழைக்கப்படுகின்றது. ஒன்றில் ஒன்று தலையீடு செய்யும் நிலை இருக்கக் கூடாது. இந்நிலையில் ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருந்து வருவது அரசியல் அமைப்பு பேரவையானது நிறைவேற்று அதிகார துறையின் ஒரு அங்கம் என்பதால் அது ஜனாதிபதியின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அவரின் தேவைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பதாகும். ஆனால் இந்த நிலைப்பாட்டை தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் உறுப்பினருமான எம்.சுமந்திரன் வலியுறுத்தி இருப்பதோடு அரசியலமைப்பு பேரவையை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். அதே நேரம் அரசியல் அமைப்பு பேரவையின் நிலைமை பற்றி ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி இரு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் அதன் கடமைகளை சுதந்திரமாக செய்வதற்கு அனுமதிக்கப்படுவது போன்றே நீதித்துறையும் சுதந்திரமாக அதன் கடமைகளை செய்ய இடமளிக்கப்பட வேண்டும். அடுத்தததாக நிர்வாகம் என்ற அடிப்படையில் ஜனாதிபதியின் கடமைப் பொறுப்புக்கள் உள்ளன. ஆனாலும் நிறைவேற்று அதிகாரம் என்ற அடிப்படையில் இந்த மூன்று துறைகளையும் சுதந்திரமாக இயங்க விடாது தலையீடுகள் செய்யப்படுமானால் அவ்வாறான ஒரு நாட்டில் பூரண ஜனநாயகம் இருக்கின்றது என்று அர்த்தம் கொள்ள முடியாது.

தற்போதைய நிலையில் இலங்கையின் போக்கில் ஜனாதிபதி அடிக்கடி பாராளுமன்றத்திற்கு பிரசன்னமாவது, உரை நிகழ்த்துவது, சபாநாயகரை தலைவராகவும் ஜனாதிபதியின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அங்கத்தவர்களை கொண்ட உயர் பதவிகளை செய்யும் போது அரசியல் தலையீட்டை இல்லாதொழித்து சுயாதீனமாக அவற்றை மேற்கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்துள்ள அரசியல் அமைப்பு பேரவையை மீறி ஜனாதிபதி நடந்து கொள்வதானது நிலைமைகளை சிக்கலாக்கி வருகின்றது. அதனால் இங்கு கடைபிடிக்கப்பட வேண்டிய வழுவேறாக்கக் கோட்பாட்டிற்கு முட்டுக்கட்டை ஏற்பட இடமிருக்கின்றது. எதுவானாலும் இவ்வாறான சுயாதீனமான நடவடிக்கைகள் அனைத்தும் ஜனாதிபதியின் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று கருதுவது முற்றிலும் தவறான அணுகுமுறையாகும். அத்துடன் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் மிக்கவர் என்பதற்காக பாராளுமன்றம், சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நீதித்துறை ஆகியன நாட்டு மக்கள் நலனுக்காக நீதியாகவும் நியாயமாகவும் இயங்க வேண்டிய அரசியல் தொழில்நுட்ப இயந்திரங்கள் மேலும் இவை ஜனாதிபதியின் காலடியில் மண்டியிட வேண்டும் என்ற நியதி இல்லை. அவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதாக ஜனாதிபதி நினைப்பதாக இருந்தால் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடமில்லாது போகலாம்.

## மனநலமும் ஆலோசனையும் 07

# அமைதி இதயத்தில் தொடங்குகிறது

மன ரீதியாகவும் ஆன்மிக ரீதியாகவும் நமக்குள் நிம்மதியாக இருப்பதையே அமைதி என்று அழைக்கிறோம். அமைதி நமக்குள் இருந்து தான் வெளிப்பட வேண்டும். அமைதியைத் தேடும் அறிவையும் அதற்கான பயிற்சியையும் வளர்த்துக் கொள்ளவது அடிப்படை தேவைகளில் ஒன்று. நாம் எடுக்கும் ஒவ்வொரு மூச்சிலும், நமது அன்றாட செயல்களிலும் தொடர்புகளிலும் அமைதி வெளிப்படுமானால் எங்கள் மனதில் அமைதி இருக்கிறது என்பது உறுதியாகும்.

நாம் அமைதியை விரும்பினாலும் அமைதி என்பது நம் அன்றாட வாழ்வில் ஒரு அரிய விடயமாக ஆகிவிட்டிருப்பதை காணலாம். நாம் எழுந்த தருணத்திலிருந்து தூங்கும் தருணம் வரை, எண்ணற்ற கவனச்சிதறல்கள் நம் கவனத்தின் ஒரு பகுதியை அல்லது பல பகுதிகளை எடுத்துக் செல்கின்றன.

நவீன வாழ்க்கை முறைகளும் குறிப்பாக கையடக்க தொலைபேசிகளும் எம்மை ஒரு கட்டுப்பாட்டில் வைத்து எம்மை அறியாமலேயே எம்மை முடக்கி விடுவதை அனுபவிக்கிறோம். இப்படி

ஏதேதோ விடயங்கள் எங்கள் வாழ்க்கையை ஓட்டிச் செல்ல நாம் அனுமதித்ததால் நாம் அமைதியை சுவைப்பதற்கு பதிலாக ஒருவித குழப்பத்தை சுவைப்பவர்களாக ஆகியிருக்கிறோம். எங்கள் மனம் எவ்வளவு அமைதியை உணருமோ அவ்வளவுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொண்டவர்களாக நாங்கள் இருப்போம்.

இந்த நேரத்தில் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போம்....

- நான் கடைசியாக எப்போது எனக்காக பத்து நிமிடங்கள் அமைதியை கடைபிடித்தேன்?

- எவருடனும் எதனுடனும் எந்தவொரு தொடர்பும் வைக்காமல் பத்து நிமிடங்கள் என்னால் அமைதி காக்க முடியுமா?

- அமைதியாக இருப்பதன் நுட்பங்களை நான் தெரிந்து வைத்திருக்கிறேனா?

இந்தக் கேள்விகளுக்கான உண்மையான பதில்கள் என்னவென்று எங்கள் மனதே எங்களுக்கு சொல்லித் தரும்.

ஒரு நாளைக்கு பத்து நிமிடங்கள் அமைதியாக இருப்பது கூட எங்கள் மனநலத்திலும் உடல் ஆரோக்கியத்திலும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தைக் கொண்டுவருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அமைதி எங்கள் ஆரோக்கியமான வாழ்வோடு மிகவும் நெருக்கமாக தொடர்பு பட்டிருக்கிறது.

அமைதி ஏன் முக்கியமானது?

எங்கள் மூளைக்கு ஒரு குணப்படுத்தும் சூழலை உருவாக்குவதில் அமைதி ஒரு முக்கிய காரணியாக இருப்பதைக் கண்டு விஞ்ஞானிகள் ஆச்சரியமடைந்துள்ளனர். அமைதி எங்கள் மூளையின் வல்லமையை அதிகரிக்கச் செய்கிறது என்று அவர்கள் கருதுகின்றனர்.

அமைதி அவ்வளவு சக்தி வாய்ந்தது.

- அமைதி நமது படைப்பாற்றலைத் திறக்கச் செய்கிறது,

- புதுமையான யோசனைகள் உருவாக்க அனுமதிக்கிறது

- சுய விழிப்புணர்வை வளர்க்கிறது

- தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்துகிறது

- அன்றாட வாழ்க்கையின் அழுத்தங்களை எதிர்த்துப் போராடுவதற்கு துணையாக இருக்கிறது

- மனத் தெளிவை வளர்க்க வழிவகுக்கிறது

-அவசரத்தில் செயற்படாமல் நிதானமாக செயல்பட ஊக்கம் தருகிறது

எனவே எங்கள் நாளில் கொஞ்ச நேரத்தையாவது அமைதியாக இருக்க ஒதுக்க வேண்டும். எமக்குள் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் வந்துகொண்டே இருக்கும். எல்லா எண்ணங்களும் தேவையானவையாக அல்லது பயனுள்ளவையாக இருப்பதில்லை. வரும் எண்ணங்கள் சரியோ, பிழையோ அவை அனைத்தையும் கட்டுப்படுத்தும் திறன் எமக்கு இருக்க வேண்டும். அதேநேரம் இந்த எண்ணங்களை நிறுத்தும் ஆற்றலும் எமக்கு இருக்க வேண்டும்.

நாம் நம் எண்ணங்களை நிறுத்தும்போது, உலகத்தை நிறுத்துகிறோம். உலகை நிறுத்தும்போது நாம் அமைதியையும் மனத் தெளிவையும் அனுபவிக்கிறோம்.

100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்போது நம் மூளை மிகவும் வித்தியாசமாக செய்யப்பட்டு வருகிறது என்று வைத்திர்கள், நரம்பியல் நிபுணர்கள் மற்றும் உளவியலாளர்கள் கூறுகிறார்கள். நாள் முழுவதும் பல காரணங்களால் நாம் பல தூண்டுதல்களைப் பெறுகிறோம். இந்த தூண்டுதல்கள் எங்கள் கவனத்தை சிதைக்கச் செய்து உணர்ச்சிக் குழப்பத்தை உருவாக்குகின்றன. இந்த உணர்ச்சிக் குழப்பத்தை ஏதோவொரு வகையில் நிர்வகிக்க வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கிறோம்.

நமக்குத் தேவையானது எங்களுடனான தனிமை கலந்த அமைதி. நம் உடலுக்கு அமைதி,

நம் மனதுக்கு அமைதி, எங்களுக்கு அவ்வப்போது அமைதியும் தனிமையும் தேவை, இந்த அமைதி பல வழிகளில் எங்களுக்கு வந்தடையும் தகவல்களின் வெள்ளத்தை ஒருங்கிணைக்க உதவியாக இருக்கும்.

இந்த சிறிய பயிற்சிகளை நாள் தவறாமல் செய்து வாருங்கள்

பயிற்சி 1

- எங்கள் செல் ஃ போன்களை கொஞ்ச நேரம் அணைத்து வைத்து...

- எங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் போன்றோரின் தொந்தரவு இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தி விட்டு....

- ஒரு நாற்காலியில் அல்லது தரையில் நேராக அமர்ந்து....

- வெறும் 10 நிமிடங்களுக்கு டைமரை வைத்து அமைதியாக, மௌனமாக இருக்க முயற்சி செய்து பார்ப்போம்.

பயிற்சி 2

ஒரு இடத்தில் அமைதியாக உட்கார்ந்து, உங்கள் இதயத்தில் கவனம் செலுத்தி எளிதாக சுவாசிக்கவும். அமைதி, அமைதி, அமைதி என்ற வார்த்தையை அமைதியாக மீண்டும் சொல்லுங்கள்.

தினமும் 10 நிமிடம் இந்த அமைதிப் பயிற்சிகளை மட்டும் செய்தால், சில நாட்களில் வித்தியாசத்தை உணர்வீர்கள்.

இப்படி தொடர்ந்து அமைதியை கடைபிடிக்கும்போது, எங்கள் உணர்ச்சிகளை அடக்கி மூளை சுறுசுறுப்பாக செயல்பட ஆரம்பிக்கும். விரைவில் ஆரோக்கியத்திலும் சுதந்திரத்திலும் முன்னேற்றம் கிடைக்கும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# முஸ்லிம் சமூகப் பிரச்சினைகளை ஒருமித்து முன்வைப்பது குறித்து ஆராய்வு





(பியாஸ் முஹம்மட்)

பல்வேறு தளங்களிலும் செயற்பட்டு வருகின்ற முஸ்லிம் சமூக நிறுவனங்களுக்கிடையில் அறிமுகத்தை ஏற்படுத்தும் வகையிலான சந்திப்பொன்று கடந்த வியாழனன்று (17) கொழும்பிலுள்ள ஸ்ரீ லங்கா இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்றது.

பஹன மீடியா மற்றும் மீட்ஸ் திட்டங்களின் தலைவர் அஸ்-ஸெய்யித் ஸாலிம் ரிபாய் மௌலானா, ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர் பேரவையின் உறுப்பினரும் தேசிய ஐக்கியத்திற்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம-தலைவருமான அஷ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, பஹன மீடியாவின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்-அப்துல் முஜீப் கபூரி உள்ளிட்ட பலரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ். அர்கம் நூரமித், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், அகில இலங்கை ஸூபி தரீக்காக்களின் சுப்ரீம் கவுன்சில் தலைவர் அஸ்-ஸெய்யித் நகீப் மௌலானா, தப்லீக் ஜமாத் அங்கத்தவர் அஷ்- அப்துல் ஹமீத் மஹ்தி, இலங்கை ஷரீஆ கவுன்சில் தலைவர் கலாநிதி தேசமான்ய மௌலவி ஹஸ்புல்லாஹ் அப்துல் காதிர் பஹ்ஜி, ஸ்ரீலங்கா ஜமாஅதே இஸ்லாமி அமீர் உஸ்தாத் அஷ். உஸைர் இஸ்லாஹி, அகில இலங்கை சுன்னத் ஜமாஅத் மஜ்லிஸில் உலமா சபை பொதுச் செயலாளர் அஷ்- ஸிறாஜ் நஜாஹி, ஸலாமா தலைவர் அஷ். ஆஸாத் அப்துல் முஈத், அகில இலங்கை சூஃபிஸ ஆன்மீக பேரவையின் தலைவர் அஷ்- அப்துல்லாஹ் நூரி, அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தலைவர் ஷாம் நவாஸ், ஹஜ் குழுத் தலைவர் இப்ராஹிம் அன்ஸார், பொரல்ல அஹதியா இஸ்லாமிய கல்வி நிலையத்தின் தலைவர் ஷிப்லி ஹாஷிம், கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஸீன், இலங்கை கதீப் முஅஸ்ஸின் சங்கத் தலைவர் மௌலவி அப்துல் ஜப்பார், ஸ்ரீ லங்கா இஸ்லாமிய நிலையத்தின் பணிப்பாளர் அஷ்- ஸணூக், அஸ்ஸுன்னா ட்ரஸ்ட் பொதுச் செயலாளர் பேராசிரியர் இன்திகாப் ஸுபர், தஃவதே இஸ்லாமி ஆலோசகர் அஷ்- தாஜுல் முனீர் காதிரி அத்தாரி, மலே சமூகத்தைச் சேர்ந்த முன்னாள் டீ.ஐ.ஜி. மாஹின் டூல் ஆகியோருடன் மேற்குறித்த சில நிறுவனங்களின் அங்கத்தவர்களும், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ, மீட்ஸ், மிஷ்காத், வக்ப் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மற்றும் நிவ்ஸ்நவ் இணையத்தளத்தின் பிரதம ஆசிரியர் பியாஸ் முஹம்மத், டாக்டர் ஸணீக் உள்ளிட்ட மற்றும் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே பல கட்டங்களில் ஒவ்வொரு அமைப்புடனும் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் குறுகிய கால அழைப்பிலேயே அனைவரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். குறித்த தினத்தில் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல் போன அகில இலங்கை மஸ்ஜித் சம்மேளனம், தேசிய ஷூறா கவுன்சில், யுனைடட் தௌஹீத் ஜமாத் ஆகிய அமைப்புகள் இனிவரும் சந்திப்புக்களில் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த பலரும் ஒரே குரலில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை முன்வைப்பதன் அவசியம் குறித்து கருத்து வெளியிட்டனர். இனிவரும் காலங்களில் முஸ்லிம் சமூகத்துக்குப் பொதுவான பிரச்சினைகளை ஒவ்வொன்றாகக் கலந்துரையாடி உரிய இடங்களுக்கு ஒரே குரலில் முன்வைப்பது எனவும் இந்தச் சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டது.

# கஹட்டோவிட்ட - அல் பத்ரிய்யா மகா வித்தியாலய பின் நுழைவாயில் வீதியை புனரமைக்க முன்வருமாறு கோரிக்கை

(ஐ. ஏ. காதிர் கான்)

வெயாங்கொடை - கஹட்டோவிட்ட அல் பத்ரிய்யா மகா வித்தியாலய (அஷ்ரப் மாவத்தை) பின் நுழைவாயில் வீதி, பல வருடங்களாக குன்றும் குழியுமாகக் காட்சியளிப்பதால், இவ்வீதி வழியாக பயணிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக, பாடசாலை மாணவர்களும் பாதசாரிகளும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மழை காலங்களில் ஆங்காங்கே நீர் நிரம்பி வழிந்தோடுவதால், இவ்வீதியின் ஊடாக எவ்விதத்திலும் பயணம் செய்ய முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

குறிப்பாக, மாணவர்கள் காலை வேளையில் பாடசாலைக்கு வரும் போது, இவ்வீதி சேறும் சகதியுமாக இருப்பதால், அவர்களுக்கு இவ்வீதி ஊடாக பயணிக்க முடியாமல் இருப்பதோடு, உடைகள் கூட அழுக்கடைந்து, இதனால் பெரும் அசௌகரியங்களுக்கும் இன்னல்களுக்கும் உட்படுவதாக மாணவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது விடயம் தொடர்பாக, அத்தனகல்ல பிரதேச சபையிடமும், இப்பிரதேச அரசியல் கட்சிகளிடமும் பல முறை சுட்டிக்காட்டியும், இதுவரையிலும் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை என பிரதேசவாசிகள் அங்கலாய்க்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, கஹட்டோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த (பெயர் குறிப்பிட விரும்பாத) ஊர்ப்பிரமுகர் ஒருவர், இவ்வீதியை கொங்கிறீட் இட்டு செப்பனிட்டுத்தர களத்தில் குதித்துள்ள நிலையில், அவரது





இப்பணிக்கு பக்க பலமாக கை கொடுத்து உதவ இதுவரை மூவர் முன்வந்துள்ளதாக, கஹட்டோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர் அல்ஹாஜ் எம். பிர்தௌஸ் தெரிவித்தார்.

இது தவிர, இவ்வீதியை குறைபாடின்றி முழுமையாக செப்பனிட, மேலும் சில மூலப்பொருட்கள் அவசியம் தேவைப்படுவதால், இவற்றையும் பெற்றுக் கொடுப்பதற்கு ஏனைய நல்லுள்ளம் படைத்தவர்களின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாகவும், இதன் பயனாக குறித்த வீதியின் திருத்த வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியும் எனவும், அல்ஹாஜ் எம். பிர்தௌஸ் நம்பிக்கை தெரிவித்தார். இது விடயமாக நேரில் வந்து, தம்மை சந்திக்க முடியும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# இலங்கை பத்திரிகை சம்மேளனத்தின் வருடாந்த மாநாட்டுக்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியது

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் 68ஆவது வருடாந்த மாநாடு நவம்பர் 1 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வை முன்னெடுப்பதற்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துக்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியிருந்தது. இந்நிகழ்வில் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் இலங்கைக்கான இந்தோனேசியா உயர் ஸ்தானிகர் தேவி குஸ்டினா டோபிங் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், கல்விமான்கள் மற்றும் கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர். ஊடகத்துறையில் நீண்ட காலமாக சேவையாற்றி தேசத்தின் முன்னேற்றத்துக்கு பங்காற்றியிருந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு கௌரவிப்புகளும் வழங்கப்பட்டிருந்தன. இவர்களுக்கு டி.எஃவ். காரியகரவன ஞாபகார்த்த ஊடக தங்க விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அனுசரணை தொடர்பில் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், “மக்களின் குரலை பிரதிபலிக்கும் ஊடகத்துறை, தகவலறியும் சமூகத்தை கொண்டிருப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. மக்களுக்கு நட்பான பெறுமதிகளைக் கொண்டுள்ள அமானா வங்கி, இலங்கை பத்திரிகை சம்மேளனத்தின் 68ஆவது வருடாந்த மாநாட்டை முன்னெடுப்பதற்கு கைகோர்த்திருந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், தேசத்துக்கு உயர் சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களை கௌரவிப்பதில் பங்கேற்றிருந்ததையிட்டும் மகிழ்ச்சியடைகின்றது.” என்றார்.




இலங்கை பத்திரிகை சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் குருலு காரியகரவன தமது கருத்தைப் பகிர்ந்து கொள்கையில், “எமது 68 ஆவது வருடாந்த மாநாட்டுக்கு முன்வந்து அனுசரணை வழங்கியிருந்தமைக்காக அமானா வங்கிக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். இந்த பங்காண்மையினூடாக, எமது சம்மேளனத்தின் நோக்கங்களை தொடர்ந்து நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என்பதுடன், நாட்டில் உயர் தரம் வாய்ந்த பொறுப்பு வாய்ந்த ஊடகவியலை பேணுவதற்கு உகந்த சூழலை உருவாக்க உதவியாக அமைந்திருக்கும்.” என்றார்.

இலங்கை பத்திரிகை சம்மேளனத்தில் அச்சு, இலத்திரனியல் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களின் சகல நிபுணர்களும் அடங்கியுள்ளதுடன், இந்த சம்மேளனம் 1955 ஆம் ஆண்டு, புலமையாளர் சங். உடகெந்தவல ஸ்ரீ சரனங்கர தேரர், நன்மதிப்பை பெற்ற ஊடகவியலாளர்களான டி.எஃப். காரியகரவன மற்றும் ஹேமா டி சில்வா ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்வதுடன், வங்கியின் 29.97% பங்குகளை தன்வசம் கொண்டுள்ளது. IsDB குரூப் ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியின் முன்னோடியான செயற்பாட்டாளர் எனும் வகையில், உலகின் சிறந்த 100 உறுதியான இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக அமானா வங்கியை ஏசியன் பாங்கர் இனால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2023 ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட தேசிய நீண்ட கால தரப்படுத்தலில் BB+(lka) எனும் உறுதியான தோற்றத்தை வழங்கியிருந்தது.

OrphanCare அமைப்பின் ஸ்தாபக அனுசரணையாளர் என்பதற்கு அப்பால், எவ்விதமான துணை, இணை நிறுவனங்களையும் கொண்டிருக்கவில்லை.

அமானா வங்கியின் உப தலைவர் சித்தீக் அக்பர் அனுசரணை காசோலையை இலங்கை பத்திரிகை சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் குருலு காரியகரவனவிடம் கையளிப்பதையும், அருகில் அமானா வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல் தலைமை அதிகாரி அசீம் ராலி மற்றும் இலங்கை பத்திரிகை சம்மேளனத்தின் கிருஷ்ணா எதிரிசிங்க மற்றும் திலங்க கனகரட்ன ஆகியோர் காணப்படுகின்றனர்.

# நாட்டின் அபிவிருத்தி - தேசிய ஐக்கியத்தை எதிர்பார்ப்பதாயின் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதை நிறுத்துங்கள்!

## அதனை என்னில் இருந்து ஆரம்பியுங்கள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு!!

காலி மக்குலுவ பாலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கச்சுவத்த முஸ்லிம் பள்ளிவாசலை மரபுரிமையாக அடையாளப்படுத்தும் நிகழ்வில் உரையாற்றிய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கையர் என்ற ரீதியில்,மனிதர்கள் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும், நாட்டின் அபிவிருத்தி மற்றும் தேசிய ஜக்கியத்தை எவரேனும் எதிர்பார்ப்பார்களாயின் ஒருவரையொருவர் ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் தொடக்க நிகழ்வைக் குறிக்கும் வகையில், வரலாற்றை விளக்கும் பலகையையும் அமைச்சர் திறை நீக்கம் செய்துவைத்தார். இது தொடர்பான தொல்பொருள் ஆய்வுகளை விரைவில் நிறைவு செய்யுமாறு, தொல்பொருள் திணைக்களத்தை இதன் போது அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

தேசிய ஒற்றுமையை நீங்கள் விரும்பினால், அதனை உங்களிடமிருந்து ஆரம்பியுங்கள். நான் என்னில் இருந்து சொல்கிறோம்.

கடந்த காலங்களில், அரசியல், சமூக மற்றும் மத மற்றும் கலாச்சார ரீதியாக, மக்கள் வேறு பட்டவர்களாக இருந்திருக்கலாம். வெ வ் வேறு மக்கள் வெ வ் வேறு மரபுகளை மதங்களுக்குள் இன்று நாங்கள் எனது சிந்தனையின் ஒரு விளைவாக பங்கேற்கிறோம். அதற்கு எனக்கு வழிகாட்டிய அம்ஹர் மௌலவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமின்றி, எமக்கு இருப்பது நாம் விரைவில் உலகுக்கு எடுத்துரைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் வருங்கால சந்ததியினருக்காக வரலாற்றைப் பாதுகாப்பதுடன், அதனை பாதுகாப்புடன் அவர்களிடம் கையளிக்க வேண்டும்








குற்றம் சாட்டாது அதற்காக ஆரம்பத்தை தன்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

காலி,மாகால்ல ஹஜ்ஜிவத்த முஸ்லிம் பள்ளிவாசலை (காலி மக்குலுவ பாலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள கச்சுவத்த முஸ்லிம் பள்ளிவாசலை) தொல்பொருள் பெறுமதிமிக்க இடமாக பெயரிடும் நிகழ்வில் அண்மையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வரலாற்று சிறப்பு மிக்க முஸ்லிம் பள்ளிவாசலை மரபுரிமையாக, பெயரிட்டு தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பது என்றால் எப்பொழுதும் பிறரைக் குற்றம் சொல்ல வேண்டிய அவசிய நிலை இருக்காது.

நாம் ஒன்றிணைந்து இலங்கையர் என்ற ரீதியில் மனிதர்களாகவும் ஒன்றிணைய வேண்டிய நேரம் வந்துவிட்டது.

பிறரைப் பற்றி அறிந்து கொள்வதுதான் கூட்டு நல்லிணக்கத்துடன் கூடிய நாட்டிற்கான அடிப்படை. ஒரு நாட்டில் வாழும் சகோதரனாகவோ அல்லது சகோதரியாகவோ மற்றவரைப் நேசிக்கக்கூடியவர்கள் அந்த நாட்டின் கண்ணியத்திற்கும் பெருமைக்கும், தேசப் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருப்பார்கள். அப்படிப்பட்ட நாடே வலிமையான நாடு என்று நாம் கொண்டு வர முயற்சித்தனர் . சிலர் மாற்றங்களை மேற்கொள்ள முயன்றனர். சிலர் புதிய கலாச்சாரப் போக்குகளுக்குள் அந்த மாற்றத்தை ஏற்படுத்த முயன்றனர். இதற்கு மத்தியில் மக்கள் வீதியில் இறங்கி வாக்களித்து போராடி அந்த மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

தற்போது, இஸ்ரேல்-பாலஸ்தீன நெருக்கடியுடன் அரசியல் இலாபம் நோக்கில் சிலர் இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சனையை இனவாத கலவரமாக கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். வரலாற்றின் முந்தைய தவறு மீண்டும் நிகழாமல் இருக்க என்னில் இருந்து எப்படி தொடங்க வேண்டும் என்று யோசித்தேன். மட்டுமே என்ற இன மற்றும் கலாசாரத்துக்கு மத்தியில் பரஸ்பர புரிதலை ஏற்படுத்தும் திட்டத்தையும் தொடங்கினோம். கடந்த சில நாட்களாக நீங்கள் இதனை பார்த்திருக்கக் கூடும்.

கச்சுவத்த பழமையான வழிப்பாட்டுத்தளம் என்பது ஒரு மத தலம் மட்டுமல்ல என்பது என் கருத்து. கச்சுவத்த வழிபாட்டுத்தலத்துடன் இலங்கையர்களாகிய நாம் கடந்த காலத்திலிருந்து எம்மிடையே இருந்த சகவாழ்வின் நெருக்கத்தையும் உணர்திறனையும் தொன்மையாக உலகுக்கு எடுத்துரைக்கிறோம் என்பதாகும்.

எனவே, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், எங்களின் இந்த தொன்மையான பாரம்பரியத்தை என்பதாகும்.

இதற்கு மேல் பேச நான் எதிர்பார்க்கவில்லை. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சந்தர்ப்பத்தில், கலந்துகொண்ட அனைவருக்கும், இந்த தருணத்தில் நேரடியாகத் தொடர்புள்ள அனைவருக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நான் என்னில் ஆரம்பித்தேன். நீங்களே தொடங்குங்கள். நீங்கள் தேசிய ஒற்றுமையை விரும்பினால்,அது உங்களிடமிருந்து ஆரம்பமாகட்டும் நீங்கள் ஒரு வளர்ச்சிக்கண்ட நாட்டை விரும்பினால், நீங்களே இதனை தொடங்குங்கள் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.



# கிரிக்கெட் உலக கோப்பை ஒரு வரலாற்று பார்வை



அப்ரித் வஸீர்

ஐசிசி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை: இதுவரை நடந்த கதை

இயோன் மோர்கன் கோப்பை

ஏறக்குறைய அரை நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டு, ஐசிசி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை பெருமை, நாடகம் மற்றும் சின்னமான தருணங்களில் மூழ்கியுள்ளது.

1975 இல் வெஸ்ட் இண்டீஸ் தொடக்கப் பட்டத்தை வென்றது முதல், உலகெங்கிலும் உள்ள அணிகள் தோராயமாக ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் அதன் ஒரு நாள் சாம்பியனாக முடிசூட்டப்படுகின்றன

போட்டியின் சமீபத்திய பதிப்பிற்கான அனைத்துக் கண்களும் இந்தியாவை நோக்கிய நிலையில், இதுவரை நடந்த 12 போட்டிகள் எப்படி நடந்தன என்பதைத் திரும்பிப் பாருங்கள்.

### 1975

லார்ட்ஸில் நடந்த இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவை 17 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெஸ்ட் இண்டீஸ் முதல் உலக சாம்பியன் ஆனது.

60 ஓவர்கள் ஒரு இன்னிங்ஸ் மற்றும் சிவப்பு பந்தைப் பயன்படுத்திய போட்டிகளைக் கொண்ட தொடக்கப் போட்டியில் எட்டு அணிகள் பங்கேற்றன.

விண்டீஸ் தனது குழுவில் உள்ள மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்றது, அரையிறுதியில் நியூசிலாந்தை தோற்கடித்தது, பின்னர் இறுதிப் போட்டியில் கேப்டன் கிளைவ் லாய்டின் சதத்தால் வெற்றி பெற்றது.

### 1979

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மேற்கிந்தியத் தீவுகள் இந்த முறை லார்ட்ஸில் தோற்கடிக்கப்பட்ட இறுதிப் போட்டியாளர்களுடன் தங்கள் பட்டத்தை வெற்றிகரமாக பாதுகாத்தனர்.

விவ் ரிச்சர்ட்ஸின் ஆட்டமிழக்காத 138 ரன்களை நடப்பு சாம்பியன்கள் புரவலர்களை வெற்றிபெற 287 ரன்கள் எடுத்தனர், மேலும் ஜோயல் கார்னர் 38 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை வீழ்த்தி இங்கிலாந்தை 194 ரன்களுக்கு ஆட்டமிழக்க உதவினார்.

### 1983

முதல் இரண்டு போட்டிகளிலும் இந்தியா ஒரே ஒரு போட்டியில் மட்டுமே வென்றது, ஆனால் மூன்றாவது போட்டியில் வெஸ்ட் இண்டீஸை லார்ட்ஸில் தோற்கடித்து கோப்பையில் புதிய பெயரைப் பெற்றதன் மூலம் முதல் பட்டத்தை வென்றது.

புதிய இரட்டை ரவுண்ட்-ராபின் குழு கட்டத்தில் வர்த்தக வெற்றிகளுக்குப் பிறகு, இறுதிப் போட்டியில் இரு நாடுகளுக்கு இடையிலான மூன்றாவது சந்திப்பை இந்தியா வென்றது, மொஹிந்தர் அமர்நாத் 12 ரன்களுக்கு 3 மேட்ச் வின்னிங் செய்தார், மேற்கிந்தியத் தீவுகள் 140 ரன்களுக்கு 184 ரன்களைத் துரத்தியது.

### 1987

இங்கிலாந்துக்கு வெளியே நடைபெற்ற முதல் உலகக் கோப்பையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் புரவலர்களாகக் காணப்பட்டன, மேலும் ஆஸ்திரேலியா முதல் பட்டத்தை வென்றதால் ஒரு புதிய சாம்பியன் இருந்தது.

இரண்டு புரவலர்களும் தங்கள் குழுவில் முதலிடம் பெற்றனர், ஆனால் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவும் இங்கிலாந்தும் மோதின, டேவிட் பூன் அதிகபட்சமாக 75 ரன்கள் எடுத்தார், ஆஸ்திரேலியாவின் 253 முதல் 50 ஓவர் போட்டியில் இங்கிலாந்து துரத்துவதற்கு ஒரு கடக்க முடியாத எண்ணிக்கையை நிரூபித்தது.

### 1992

ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட முதல் போட்டியானது, முதல் ஐசிசி ஆடவர் உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில், வண்ண ஆடைகளைக் கொண்ட இங்கிலாந்து அணியை வசதியாக வீழ்த்தியதால், பாகிஸ்தான் தனது முதல் பட்டத்தை வென்றது.

இம்ரான் கானின் 72 ரன்களின் கேப்டன் இன்னிங்ஸ் பாகிஸ்தான் 249 ரன்களுக்கு மொத்தம் 249 ரன்களுக்கு உதவியது, வாசிம் அக்ரம் ஆலன் லாம்ப் மற்றும் கிறிஸ் லூயிஸை அடுத்தடுத்த பந்துகளில் வெளியேற்றுவதற்கு முன் இங்கிலாந்து துரத்துவதற்கு நன்றாக இருந்தது.

### 1996

முதல் 12 அணிகள் கொண்ட போட்டியின் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவை எளிதாக வீழ்த்தியதால், இலங்கை தொடர்ச்சியாக நான்காவது புதிய சாம்பியனாகவும், முதல் வெற்றியைப் பெற்ற அணியாகவும் ஆனது.

தொடரின் வீரர் சனத் ஜயசூரிய மற்றும் சக தொடக்க ஆட்டக்காரர் ரொமேஷ் கலுவிதாரண மலிவாக இழந்த போதிலும், அரவிந்த டி சில்வாவின் ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்கள் லாகூரில் 3.4 ஓவர்கள் மீதமிருக்க 241 ஓட்டங்களைத் துரத்திய போது இணை ஹோஸ்ட்களை வெற்றிபெறச் செய்தது.

### 1999

ஐந்து நாடுகளில் நடைபெற்ற போட்டியில் லார்ட்ஸ் மைதானத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி இரண்டு உலகக் கோப்பை பட்டங்களை வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணியுடன் ஆஸ்திரேலியா இணைந்தது.

இணை-புரவலர்களான இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்து இரண்டும் குழுநிலையில் தோல்வியடைந்தன, போட்டிகள் டப்ளின், கார்டிஃப் மற்றும் ஆம்ஸ்டெல்வீனில் நடைபெற்றன.

ஆஸ்திரேலியா தனது குழுவில் பாகிஸ்தான் உட்பட இரண்டு முறை தோல்வியடைந்தது, மேலும் ஒரு மறக்கமுடியாத டையைத் தொடர்ந்து கடைசி நான்கில் தென்னாப்பிரிக்காவை வீழ்த்தியது, இது புதிய சூப்பர் சிக்ஸ் கட்டத்தில் அவர்களின் சிறந்த ரன் விகிதத்தின் மூலம் ஸ்டீவ் வாவின் அணி முன்னேறியது.

இறுதிப் போட்டி மிகவும் ஒருதலைப்பட்சமாக இருந்தது, ஷேன் வார்னின் 33 ரன்களுக்கு நான்கு விக்கெட்டுகளால் ஆஸ்திரேலியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது, பாகிஸ்தானை வெறும் 132 ரன்களுக்கு ஆட்டமிழக்க உதவியது.

### 2003

தென்னாப்பிரிக்காவில் ஆஸ்திரேலியா தனது கிரீடத்தைத் தக்க வைத்துக் கொண்டது, குழு நிலை மற்றும் சூப்பர் சிக்ஸ ில் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றது, முதல் முறையாக அரையிறுதிக்கு வந்த இணை ஹோஸ்ட் கென்யாவை வென்றது உட்பட.

ரிக்கி பாண்டிங்கின் 140 ஆட்டமிழக்காமல், இறுதிப் போட்டியில் இந்தியா 360 ரன்களை வெற்றி பெறச் செய்தது, இறுதியில் வீரேந்திர சேவாக்கின் சிறந்த 82 ரன்களுக்குப் பிறகும் 125 ரன்கள் அதிகம் என்பதை நிரூபித்தது.

### 2007

மேற்கிந்தியத் தீவுகளில் தொடர்ச்சியாக மூன்றாவது பட்டத்தை வென்றதன் மூலம் ஆஸ்திரேலியா வரலாறு காணாத ஹாட்ரிக் வெற்றிகளை நிறைவு செய்தது.

புதிய 16-அணி வடிவமானது நான்கு குழுக்கள் கொண்ட நான்கு குழுக்களைக் கண்டது, அவுஸ்திரேலியா அவர்களின் ஆட்டத்தில் வெற்றிபெற்று, ஏழு போட்டிகளில் ஏழு வெற்றிகளுடன் சூப்பர் எட்டு நிலைக்குத் தங்கள் வடிவத்தைத் தொடர்ந்தது.

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான அரையிறுதி வெற்றியானது, இலங்கைக்கு எதிராக மழையால் பாதிக்கப்பட்ட இறுதிப் போட்டியை அமைத்தது, இது 1996 ஆம் ஆண்டின் காட்சிப்பொருளின் மறுபரிசீலனையாகும், ஆடம் கில்கிறிஸ்டின் 149 ரன்களுடன் மேட்ச் வின்னிங் நிரூபிக்கப்பட்டது.

### 2011

இணை நடத்தும் இலங்கையை வீழ்த்தி இரண்டாவது பட்டத்தை வென்றதன் மூலம் சொந்த மண்ணில் உலகக் கோப்பையை வென்ற இரண்டாவது புரவலர் என்ற பெருமையை இந்தியா பெற்றது.

காலிறுதியில் ஆஸ்திரேலியாவின் நான்காவது தொடர் பட்டத்தை முடித்த பிறகு, கடைசி நான்கில் இந்தியா 29 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது.

மஹேல ஜெயவர்த்தனேவின் 103 ஆட்டமிழக்காமல் இந்திய அணி இறுதிப் போட்டியில் 275 ரன்களுக்கு வெற்றி பெற்றது மற்றும் கௌதம் கம்பீரின் 97 ரன்களை வீழ்த்தியது.

டி 91 நாட் அவுட் எம்.எஸ். வீரர்கள் சச்சின் டெண்டுல்கரை தூக்கிக்கொண்டு வான்கடே மைதானத்தை சுற்றி வர 10 பந்துகள் மீதமிருந்த நிலையில் தோனி வெற்றியை வசப்படுத்தினார்.

### 2015

ஆஊபுயில் நியூசிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா மீண்டும் தங்கள் கிரீடத்தை வென்றது.

பிளாக் கேப்ஸ் குழு கட்டத்தில் பிரகாசித்தது, ஆக்லாந்தில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி உட்பட அனைத்து போட்டிகளையும் வென்றது.

அவர்கள் மீண்டும் இறுதிப் போட்டியில் சந்தித்தபோது, மிட்செல் ஜான்சன் மற்றும் ஜேம்ஸ் பால்க்னர் ஆகியோரின் தலா மூன்று விக்கெட்டுகள் ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு வெறும் 184 ரன்கள் மட்டுமே தேவைப்பட்டது மற்றும் ஸ்டீவ் ஸ்மித் மற்றும் மைக்கேல் கிளார்க் ஆகியோரின் அரை சதங்கள் அவர்களைக் கடந்து சென்றன.

### 2019

இன்றுவரை மிகவும் வியத்தகு இறுதிப் போட்டியைத் தொடர்ந்து, 50 ஓவர்கள் மற்றும் ஒரு சூப்பர் ஓவருக்குப் பிறகு பக்கங்கள் சமன் செய்யப்பட்ட பின்னர், நியூசிலாந்தை எல்லைக் கணக்கில் வீழ்த்தி இங்கிலாந்து தனது முதல் பட்டத்தை வென்றது.

இரண்டு இறுதிப் போட்டியாளர்களும் குழுநிலையில் மூன்று ஆட்டங்களில் தோல்வியடைந்து, மூன்றாவது மற்றும் நான்காவது இடத்திற்கு முன்னேறினர், ஆனால் லார்ட்ஸ ில் ஒரு புதிய சாம்பியன் மகுடம் சூட்டப்படுவார் என்பதற்கு உத்தரவாதம் அளிக்க அவர்களின் அரையிறுதியில் வெற்றி பெற்றார்கள்.

இரண்டு அணிகளும் பிரிக்க முடியாததால், இங்கிலாந்துதான் கோப்பையில் தங்கள் பெயரை மிகக் குறைந்த வித்தியாசத்தில் சேர்க்கும்.

### 2023

2023க்கான வெற்றியை பெரும் என இந்திய அணியின் மேலான பலரது எதிர்பார்ப்புக்கள் குவிந்திருந்து. இதற்கு பிரதான காரணம் 2023க்கான host அணியாக இந்தியா திகழ்ந்தமையே.

இருப்பினும் அவுஸ்திரேலிய அணியின் captain ன் அதிரடி ஆட்டத்தில் 2023க்கான வெற்றியை இலகுவாக அவுஸ்திரேலிய அணி 6 விக்கட் வித்தியாசத்தில் இலகுவாக தனதாக்கிக் கொண்டது.



அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் 2023 இதற்கான ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் எம் .எச்.எஸ்.ஆர் மஜீதிய்யா தலைமையில் இடம்பெற்றது.

ஏ.றாஸிக் சிறுவர் மெய்வல்லுனர் வளவாளர் ஜமீல் பாடசாலை பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு செயலாளர் பொறியியலாளர் எம். ரீ.எம்.அனப் உறுப்பினர்களான ரீ.எம்.இர்பான் ஐ.ஹஸீனா பானு ஆகியோரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.றிஸான் அமீர் ஏ பாறூக் பாடசாலை ஆசிரியர்கள் நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர். (பாறுக் ஷிஹான்)

## கட்டாரில் ஸ்கை தமிழ் விருதும் வழங்கும் நிகழ்வு

இலங்கை,இந்திய, கட்டார் ஆளுமைகளுக்கு விருது வழங்கும் ஸ்கை2023 விழா கட்டார் தோஹாவில் 30 ம் திகதி மாலை 6மணிக்கு நடைபெறும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் ஒமர் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.




இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.